பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 10 புதன்கிழமை (27-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:272

### தமிழ்க் கட்சிகள் கடுமையாக ஆட்சேபித்த போதிலும்

# கிழக்கில் பொலீஸுக்கு ஆள் திரட்டும் திட்டத்தில் எவ்வித மாற்றமுமில்லை!

## அமைச்சர் ஹக்கீமுடனான சந்திப்பில் பிரதமர் உறுதி

கொழும்பு,ஒகஸ்ட்27

**கிழக்கில் அவசர அவசரமாக பொலீஸுக்கு ஆள்திரட்டும் அரசின் முடிவை தமிழ்க்கட்சிகள் கடுமையாக ஆட்சேபித்துள்ளன.**

**ஆனால், அத்திட்டத்தில் எந்தவித மாற்றமும் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்து கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமை குறித்து பேசினார்.

அப்போது கிழக்கு மாகாணத்தில் பொலீஸ் சேவைக்குப் புதிதாக ஆள்களைச் சேர்க்கும் அரசின் திட்டத்தில் எவ்வித மாற்றமுமில்லை என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையில் இரு முஸ்லிம் இளைஞர்கள் படுகொலையுண்ட சம்பவத்தை அடுத்து கிழக்கில் பதற்ற நிலை ஏற்பட்டது.

முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று அமைச்சர்

(14ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரில் நேற்று ஆறுமுகசுவாமி தேரில் ஆரோகணித்து வந்த காட்சி.

### 'காணாமற்போனவர்கள்' வீடு திரும்பினர்

## மூதூரில் மீனவர்களை கடற்படையினர் தடுத்து வைத்திருந்து பின்னர் விடுவித்தனர்

மூதூர்,ஒக.27

காணாமற்போனவர்கள் எனக் கருதப்பட்ட திருகோணமலை, சம்பூர்ப் பகுதி மீனவர்கள் ஒன்பது பேர் 48 மணி நேரத்தின் பின்னர் - நேற்று முற்பகல் 8.30 மணியளவில் - பத்திரமாக வீடு திரும்பினர்.

இந்த மீனவர்கள் காணாமற்போனதால் மூதூர் பகுதியில் ஏற்பட்ட பதற்றமும் கவலையும் அவர்கள் பத்திரமாக வீடு திரும்பியதை அடுத்து நீங்கின.

இந்தச் சம்பவம் குறித்துப் தெரிய வருவதாவது:-

கடந்த 15ஆம் திகதி இறால்குழி, நாவலடிப் பகுதியில் தங்கியிருந்து மீன்பிடிக்கச் சென்ற - சம்பூரைச் சேர்ந்த - ஒன்பது மீனவர்கள் கடந்த ஞாயிறன்று காலை வீடு திரும்பிக் கொண்டிருந்த போது காணாமற் போயினர். அவர்களது படகு மட்டும் மூதூர் இறங்குதுறையில் அநாதரவாக விடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

அடுத்த நாள் திங்கட்கிழமை பிற்பகலாகியும் அவர்கள் வீடுவந்து சேராமையினால் பதற்றம், பரபரப்பு ஏற்பட்டது.

ஞாயிறு காலை இறால்குழியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த சமயம மூதூர் இறங்குதுறைக்கு நெருக்கமாக வைத்து, கடற்படையினர் தங்களைக் கைது செய்தனர் என்று அந்த மீனவர்கள் கூறுகின்றனர்.

(14ஆம் பக்கம் ,பார்க்க)

## நல்லை ஆலயத்தில் நேற்று மட்டும் 35 பவுண் நகைகள் அபகரிப்பு!

### இது தொடர்பாக 12 பேர் கைது

யாழ்ப்பாணம்,ஒக.27

நல்லைக்கந்தன் ஆலயத்தில் நேற்று நடந்த தேர் உற்சவத்தின் போது பக்தர்களிடமிருந்து சுமார் 35 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

ஐந்து தாலிக்கொடிகள், 12 தங்கச் சங்கிலிகள், ஒரு கைச் சங்கிலி ஆகிய நகைகளே திருடப்பட்டுள்ளன.

ஆலயத்தில் இயங்கும் தற்காலிக பொலீஸ் நிலையம், உற்சவகால செயலணி அலுவலகம் ஆகியவற்றில் இது

(14ஆம் பக்கம் பார்க்க)



இடைக்கால நிர்வாக வரைவு குறித்து பாரீஸில் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் சட்ட வல்லுநர் மாநாட்டின் மூன்றாம் நாள் அமர்வில் பங்கேற்ற சமஷ்டிக்கான கனேடிய பொது மன்றத்தின் தலைவர் பொப்ரே, அரசியல்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

## சொல்ஹெய்ம் பாரீஸ் விஜயம்

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், பிரான்ஸ் தலைநகர் பாரீஸுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையில் பாரீஸ் சென்றுள்ள குழுவினர், அரசு சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பாகச் சட்ட வல்லுநர்களுடன் அங்கு ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

பாரீஸ் செல்லும் நோர்வே தூது வரும் விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்களுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யுத்தநிறுத்த உடன்படிக்கையால் தென்பகுதிக்கே அதிக நன்மை!

### ஒப்புக்கொள்கிறார் அமைச்சர் பீரிஸ்

நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டால் எந்தவித அபிவிருத்தியையும் மேற்கொள்ள முடியாது. உலக நாடுகளின் நம்பிக்கையையும் இழக்க நேரிடும். எனவே, அரசு மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் ஆதரவளிக்க வேண்டும். அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்துள்ள யுத்தநிறுத்தத்தால் தென்பகுதி மக்களே பெரும் நன்மை அடைந்துள்ளனர். பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் தென்பகுதியிலேயே மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அமைச்சரவைப் பேச்சாளரும், அரசியல் விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் காலை இவ்வாறு கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் கடந்த 19 மாத காலத்தில் அரசு மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள், உருவாக்கப் பட்ட வேலைவாய்ப்புகள், அடுத்த இரண்டு வருடங்களில் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்திப் பணிகள் ஆகியவை குறித்து அமைச்சர் விளக்கம் அளித்தார்.

மக்களின் அன்றாட, அடிப்படைத் தேவைகளில் மின்சாரமும் - போக்குவரத்துப் பாதைகளும் அவசியமானவை. இதனால், சமாதானத்தின் மூலம் கிடைத்த நன்மைகளின் காரணமாக

(14ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டமைப்பு இன்று பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு,ஒக.27

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பர்.

இச்சந்திப்பின்போது, கிழக்கு மாகாணத்தில் 550 பொலீஸார் திரட்டுவது குறித்தும் ஆராயப்படும். திருமலை மாவட்ட எம்.பி.இரா.சம்பந்தன் இச்சந்திப்புக்குத் தலைமைவகிப்பார்.

### இந்து கலாசார அமைச்சு மேற்கொண்ட

## புனரமைப்புத் திட்டப் பணிகளின் விவரம் கோருகிறது திறைசேரி

கொழும்பு,ஒக.27

குடாநாட்டில் புனரமைப்புப் பணிகளுக்கென இந்துகலாசார அமைச்சுக்கு வழங்கப்பட்ட ஒன்றரைக்கோடி ரூபா நிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்த, யாழ். அரச அதிபரைக் கேட்டிருக்கிறார்.

யாழ். மாவட்ட புனரமைப்புப் பணிகள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை பிரதமரிடம் இந்து கலாசார அமைச்சு சமர்ப்பித்திருக்கிறது.

இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு பத்துக்கோடி ரூபாவை வழங்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் பயணக் கட்டணம் செப்.1 முதல் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,ஒக.27

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ் பயணக் கட்டணங்கள் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளதாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் சு.மணிவாசகம் அறிவித்துள்ளார்.

ஆயினும், தற்போது நடைமுறையிலுள்ள 3ரூபா மற்றும் 4ரூபா பயணக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை என்றும் -

தற்போது வழங்கப்படும் அடுத்த மாதத்திற்கான பருவகாலச் சீட்டுக்கள் புதிய கட்டணத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படுவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (புதிய கட்டண விவரம் 2ஆம் பக்கத்தில்) (ஓ-3)

## படகில் இலங்கை வர முயற்சித்த யாழ். வாலிபர் தமிழகத்தில் கைது!

இராமேஸ்வரம்,ஒக.27



இராமேஸ்வரம் - தனுஷ்கோடி கடற்பகுதி ஊடாக இலங்கை வர முயன்ற யாழ்ப்பாண வாலிபர் ஒருவரை இந்திய கடற்படையினர் கைதுசெய்து பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி அரிச்சல் முனை கடற்கரையில் இரண்டு பைகளுடன் தனியாக நின்ற இவரை ரோந்து சென்ற கடற்படையினர் கைது செய்தனர்.

கடற்படையினர் நடத்திய (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்று யாழ். வந்த ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் யாழ். செயலகத்தில் அரச அதிபருடன் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.
(படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

யாழ். இந்துக் கல்லூரி விடுதிக் கட்டடத் தொகுதிக்கு

# 'றான்' வழங்கிய நிதியிலும் பார்க்க 15 இலட்சம் ரூபாவுக்கு அதிக வேலை

## பொறியியலாளர்களின் மதிப்பீட்டு அறிக்கை யாழ்.அரச அதிபருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதிக் கட்டடத் தொகுதி வேலைகள் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட்ட பொறியியலாளர் குழு தனது மதிப்பீடுகளைப் பூர்த்தி செய்திருப்பதாக அறியவருகின்றது.

இக்கட்ட வேலைகளுக்காக றான் அமைப்பு ஊடாக வழங்கப்பட்ட தொகையிலும் பார்க்க சுமார் ஒன்றரை மில்லியன் (15 லட்சம்) ரூபாவுக்கு அதிகமான தொகைக்கு வேலைகள் பூர்த்தியாகியிருக்கின்றன என்று பொறியியலாளர்கள் மதிப்பிட்டு இருக்கின்றனர்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் இந்தக் கட்டடப் பணிகளைப் பொறுப்பேற்று மேற்கொண்டுவந்தது.

றான் அமைப்பின் கீழ் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட கட்டடப் பணிகள் குறித்து சில சர்ச்சைகள் கிளப்பப்பட்டதையடுத்து யாழ் இந்துக் கல்லூரி விடுதிக் கட்டட வேலைகள் உட்பட சில கட்டடப் பணிகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் மேற்கொண்டார்.

இந்துக் கல்லூரி விடுதிக் கட்டட வேலைகளை மதிப்பீடு செய்யும் பொறுப்பு யாழ். பிராந்திய கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. பிராந்திய கட்டடத் திணைக்கள தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் யாழ். செயலகக் கட்டடப் பிரிவு அதிகாரிகள் கொண்ட குழுவினர் கட்டடத்தில் இதுவரை பூர்த்தியாகியுள்ள சகல பணிகளையும் ஆரம்பத்தில் இருந்து மதிப்பீடு செய்தனர்.

யாழ். கட்டடத்திணைக்கள் பிராந்திய பிரதம பொறியியலாளர் தலைமையிலான குழு தனது மதிப்பீட்டு அறிக்கையைத் தயார் செய்து விட்டது என்றும் -

மதிப்பீட்டு அறிக்கை விரைவில் யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

இக்கட்ட வேலைகளுக்காக இது வரை ஒரு கோடி 34 இலட்சம் ரூபாவை றான் அமைப்பு வழங்கியுள்ளது.

சுமார் ஒரு கோடி 49 இலட்சம் ரூபாவிற்கு பணிகள் பூர்த்தியாகியிருக்கின்றன என்று பொறியியலாளர் குழு மதிப்பீடு செய்திருக்கிறது.

கல்லூரி மாணவர் விடுதி, சிற்றுண்டிச்சாலை, பெரிய கருத்தரங்கு மண்டபம், விளையாட்டு மைதானப் பார்வையாளர் அரங்கு (பவிலியன்), கணனி மற்றும் இசைத்துறைக்கான கல்விப் பிரிவுக் கூடங்கள் ஆகியவை அடங்கிய மூன்று அடுக்குகளைக் கொண்ட இக்கட்டடத் தொகுதியில் சுமார் 80 வீதமான பணிகள் பூர்த்தியாகிவிட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

### பஸ் கட்டண உயர்வு

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிமுதல் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

தற்போதைய கட்டணங்களும், புதிய கட்டணங்களும் வருமாறு:-

05.00 - 06.00, 06.00 - 07.00, 07.00 - 08.00, 7.50 - 9.00, 9.00 - 11.00, 10.00 - 11.50, 10.50 - 13.00, 11.50 - 14.00, 12.00 - 15.00, 13.00 - 16.00, 14.00 - 17.00, 14.50 - 17.50, 15.00 - 18.00, 16.00 - 19.50, 17.00 - 20.00, 18.00 - 21.00, 18.50 - 22.00, 19.00 - 23.50, 20.00 - 25.00, 21.00 - 25.50, 22.00 - 26.00, 23.00 - 27.50, 24.00 - 29.00, 25.00 - 30.00. (ஒ-3)

# தேர்தல் சீர்திருத்தக் குழு முதலாம் திகதி கூடும்

தேர்தல் முறையை மாற்றியமைப்பது குறித்து சிபாரிசுகளைத் தெரிவிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் முதலாம் திகதி முதல்தடவையாகக் கூடும்.

இக்கூட்டம் தொடர்பாக குழுவின உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று குழுவின் தலைவரான கொழும்பு மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பியான தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் சேர்ந்த இருபது எம்.பிக்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

நேற்று யாழ். வந்த

# ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழு தேவைகள் குறித்து ஆராய்ந்தது

யாழ்ப்பாணம்,ஓக.27

ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த உயர்மட்டக்குழுவொன்று யாழ். குடாநாட்டிற்கு நேற்று விஜயம் செய்தது. குடிதண்ணீர், மின்சாரம் மற்றும் வீதிப்புனரமைப்பு என்பன தொடர்பாக இங்கு மேற்கொள்ளவேண்டிய அவசர தேவைகள் பற்றி இக்குழு ஆராய்ந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த முகாமைத்துவ நிபுணர் றோபேர்ட் கோர்டன் ரிங்கர், தென் ஆசியப் பகுதி தொலைத் தொடர்பு மற்றும் போக்குவரத்துப் பிரிவு மூத்த திட்ட நிபுணர் சிறி விடோவற்றி, தென் ஆசியப் பகுதி பிரதமசக்தி நிபுணர் ரூன் ஸ்ரோம் ஆகியோர் உட்பட 8 பேர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

நேற்றுக்காலை வருகை தந்த இக்குழுவினர் யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன், திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோருடன் குடிதண்ணீர் மற்றும் மின்சார விநியோகம், வீதிப்புனரமைப்பு போன்ற பணிகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அவற்றில் அவசரமாக நிறைவேற்றவேண்டிய தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் குடிதண்ணீர் விநியோகம், மின்சார விநியோகம் மற்றும் வீதிப்புனரமைப்புகளுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியுள்ள 5கோடி அமெரிக்க டொலர்கள் மூலம் மேற்கொள்ள வேண்டிய அவசர வேலைத்திட்டங்கள் தொடர்பாக இக்குழு ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)



நல்லை ஆதீன மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வலுவிழந்தோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற பிரமுகர்களையும், வலுவிழந்த ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

உதயன் ஆதரவில்

# சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பான 3 நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.27

இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றவுள்ளோருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம், 30 ஆம், 31 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சட்டக் கல்லூரி சட்ட மாணவர் இந்துமாசபையும் 'உதயன்' பத்திரிகை நிறுவனமும் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளன.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சையைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட 3 நாள்களும் தினமும் காலை 9 மணியில் இருந்து மாலை 5மணிவரையும் இக்கருத்தரங்கு 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் கலந்துகொள்வதற்குத் தமது பெயர்களைப் பதிவுசெய்தோர் நாளை வியாழக்கிழமை காலை 8.45மணிக்கு முன்னர் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்குச் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இதுவரையும் பெயர்களைப் பதிவு செய்யாதவர்கள் 071 - 2386070 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# புலம்பெயர்ந்து சென்ற தமிழ்மக்கள் தாயக அபிவிருத்திக்கு உதவவில்லை!

## யாழ். மாவட்ட அரச அதிபர் கவலை

யாழ்ப்பாணம்,ஓக.27

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சின்னாபின்னப்பட்டிருக்கும் வடக்குக் கிழக்குப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ்சமூகம் போதியளவு உதவவில்லை.

- இவ்வாறு கவலை தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன்.

பிரிட்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டக்கிளை வலுவிழந்தவர்களுக்கு சக்கரநாற்காலிகளை வழங்கும் நிகழ்வு நேற்று நல்லை ஆதீன மண்டபத்தில இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் தனது கவலையை வெளியிட்டார்.

தமிழர் புனர்வாழ்வு யாழ்ப்பாணக் கிளை பொறுப்பாளர் எஸ்.ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச அதிபர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளைப் பொறுத்தவரை உள்நாட்டில் கிடைக்கும் வருமானத்தைவிட பிற நாடுகளில் இருந்து கிடைக்கும் வருமானமே அந்த நாட்டின் அபிவிருத்திக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியினை கொடிய யுத்தத்துக்கு செலவீடு செய்வதிலும் பார்க்க நன்கு திட்டமிட்ட முறையில் அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்துவதே கூடிய பயன்பாடு உடையதாக அமையும்.

இங்கு இடம்பெற்ற போராட்ட சூழலினால் இளம் தலைமுறையினா பலர் அங்கவீனர்களாகி வலுவிழந்து எத்தகைய உதவிகளும் இன்றி நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

இத்தகையோருக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்கு முன் வந்த சைவக் கோயில்கள் ஒன்றியத்தின் நிர்வாகிகளுக்கு எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்மக்களின் பெரும் பகுதியினர் போராட்டத்துடன் இணைந்தும் பங்கு பற்றியும் தமது வாழ்க்கையை வேறு பக்கம் திருப்பியுள்ளார்கள்.

ஒரு பகுதியினர் இம்மண்ணில் இருந்து புலம்பெயர்ந்து சென்று வேறு ஒரு வகையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அதேபோல இந்த மண்ணில் இருந்து கொண்டே இடம்பெயர்ந்து பல்வேறு துன்ப துயரங்களை மேலும் பலர் அனுபவிக்கின்றனர்.

இவர்களுக்கு உதவிகள் முழுமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இவர்களின் தேவையறிந்து தன்னாலான உதவிகளைச் செய்து வருகிறது.

அரசாங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை விடுதலைப் புலிகளின் அமைப்பு என்று தொடர்புபடுத்தி அதனுடன் இணைந்து பணியாற்றிய அரச அலுவலர்களையும் கடந்த காலங்களில் வேலையிலிருந்து நீக்கியிருந்தது.

ஆனால், இன்று அந்தநிலை முழுமையாக மாறியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சர்வதேச அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு அந்த அமைப்புடன் அரசு கலந்துரையாடல்களையும் மேற்கொள்கின்றது.

இந்த அமைப்பு போரினால் துன்பப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு வெளிநாடுகளில் வாழும் புலம் பெயர்ந்தோர் தமிழ்சமூகம் ஒத்துழைக்க வேண்டும்.

அதன் மூலம் போரினால் சிதைவடைந்துள்ள வடக்கு - கிழக்குப் பகுதியை அபிவிருத்தி செய்யலாம் - என்றார்.

இந்நிகழ்வில் யாழ் நல்லூர் கோட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஞானசம்பந்த தேசிகர், சங்கானைப் பிரதேச செயலர் லயன் கலாநிதி கே.குணராசா, யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் வி.தியாகராசா கியூடெக் பணி இயக்குநர் வணபிதா ஜெயக்குமார் அடிகள் ஆகியோா சிறப்புரையாற்றினர்.

இறுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் தெரிவு செய்யப்பட்ட 15 வலுவிழந்தோருக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரினால் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. (ஒ-5-86)

# அரச வைத்தியசாலைகளில் நேற்று சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன

வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் சுகாதார சேவை தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், சேவைகள் முற்றாக ஸ்தம்பித்திருந்தன.

பெரியாஸ்பத்திரிகள், போதனா வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், கிராமிய வைத்திய சாலைகள் போன்ற 605 வைத்திய சாலைகளில் நேற்று பெரும்பாலான பணிகள் நடைபெறவில்லை.

தாதிமார் சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடாத காரணத்தால் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் பாதிக்கப்படவில்லை.

385 அரச மருந்தகங்களும், பாடசாலை பற்சிகிச்சைப் பிரிவுகளும் இப்போராட்டத்தினால் பாதிக்கப்பட்டன.

தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் வழமைபோல இயங்கின.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பௌதீகவியலாளர்கள், ஆய்வுகூட வைத்திய பரிசோதகர்கள், மின்கதிர் இயக்குநர்கள், மருந்தாளர்கள் மேற்கொண்ட ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தினால் பெரும்பாலான வைத்தியசாலை சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன.

யாழ். ஆஸ்பத்திரியிலும் சுகாதார சேவை ஊழியர்கள் சுகவீன லீவுப் போராட்டம் மேற்கொண்டதால், வைத்திய சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. (ஒ-15-139)


# ஜனக பண்டார எம்.பியின் விளக்கமறியல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிப்பு

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மாத்தளை மாவட்ட எம்.பி. ஜனக பண்டார தென்னக்கோன் உட்பட ஏழு சந்தேக நபர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு தம்புள்ள நீதிவான் சாலிய பெரேரா நேற்று உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் விடுத்த பிணை அனுமதி கோரிக்கையை நிராகரித்தே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டார்.

தம்புள்ளையில் ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

ஜனக பண்டார தென்னக்கோன் எம்.பி. கொழும்பில் தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்ட பின்னர் கோட்டை நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்பது தெரிந்ததே.




இந்தியாவின் மும்பை நகரில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பு களுக்கு பாகிஸ்தானே காரணம் என்று குற்றஞ்சாட்டி புதுடில்லியில் நடந்த ஆர்ப்பாட்டம்.

# மும்பை குண்டுவெடிப்புகளை அடுத்து இந்தியா முழுவதும் பலத்த பாதுகாப்பு!

## பெண் தீவிரவாதியே தாக்குதலை நடத்தினார்

மும்பை தொடர் குண்டுவெடிப்பு களை அடுத்து இந்தியா முழுவதும் பாதுகாப்பு பன்மடங்காக அதிகரிக் கப்பட்டுள்ளது. என்றுமில்லாதவாறு வீதிகளில் பொலீஸாரும், படையின ரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள் ளனர். இந்தக் குண்டுவெடிப்புகளுக்கு பல்வேறு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அறுபதுக்கும் மேற்பட்டோரை பலி யெடுத்துள்ள இந்தக் குண்டுவெடிப் புகளில், ஒன்றை நடத்தியது பெண் தீவிரவாதி என்று தெரியவந்துள் ளது. இவர், காஷ்மீரில் செயற்படும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதியாக இருக்கலாம் என மத்திய உளவுப் பிரிவு சந்தேகிக் கின்றது.

மும்பையின் புறநகரில் ஒரு ஆணும், பெண்ணும் பாண்டே என்ற சாரதி ஓட்டி வந்த வாடகைக் காரில் ஏறியுள்ளனர். அவர்கள் தாம் எடுத்து வந்த பெட்டியை காரின் டிக்கியில் வைத்துள்ளனர். இதில்தான் குண்டு இருந்ததாகத் தெரிகிறது.

பின்னர் காரை கேட்வே ஒப் இந்தியா பகுதிக்கு செலுத்துமாறு சாரதியைக் கேட்டுள்ளனர். சாரதி பாண்டேயும் காரை அங்கு செலுத்தியுள்ளார்.

வழியில் தோபி தலோ என்ற இடத்தில் காரில் இருந்த ஆண் மட்டும் இறங்கிக் கொண்டார். ஆனால் அந்தப் பெண் தொடர்ந்து கேட்வே ஒப் இந்தியா பகுதிக்கு காரை செலுத் தக் கூறியுள்ளார்.

'கார் அங்கு சென்றவுடன் நான் மதிய உணவருந்திவிட்டு வருகிறேன். மீண்டும் பயணத்தைத் தொடர வேண் டும். இங்கேயே இரு' என சாரதியிடம் கூறிவிட்டு அந்தப் பெண் இறங்கிச் சென்றுள்ளார். இதையடுத்து சாரதியும் காரில் இருந்து இறங்கித் தேநீர்க் கடைக்குச் சென்றுள்ளார்.

அடுத்த சில நிமிடங்களில், பயங் கரமான அந்த குண்டுவெடிப்பு நடந்தது. இதையடுத்து அங்கு நின்ற கார்கள் அனைத்தும் உடைந்து சிதறிவிட தனது கார் என்ன ஆனது என்று பார்க் கச் சென்றுள்ளார் பாண்டே.

ஆனால் அவரது கார் சுக்கு நூறா கிப் போய் இருந்தது. கார் நின்ற சுட யமே இல்லாத அளவுக்கு அது துகள் களாக சிதறியிருந்தது.

இதனால், அந்தக் காரில்தான் குண்டு இருந்தது தெரியவந்தது. பொலீஸ் விசாரணையிலும் அந்தக் காரில் குண்டு இருந்தது உறுதியானது.

இதையடுத்து பாண்டே தானாக முன்வந்து பொலீஸாரிடம் சென்று நடந்த சம்பவத்தைக் கூறினார். (ம)

# ஆப்கானில் அமெரிக்கப் படைகளால் ஐம்பது தலிபான்கள் சுட்டுக்கொலை!

சாபுல்,ஓக.27

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினருக்கும், தலிபான்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடந்த கடும் சண்டையில் ஐம்பது தலிபான் கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட தலிபான் கெரில்லாக்கள் அமெரிக்கப் படையி னரைத் தாக்குவதற்கு திட்டம் தீட்டிக் கொண்டிருந்த வேளையிலேயே மேற் படி படை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக அமெரிக்க இராணுவப் பேச் சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த படை நட வடிக்கையின் போது எப்-16,ஏ-10ரக குண்டு வீச்சு விமானங்கள் தலிபான் களின் கோட்டைகள் மீது சரமாரியான குண்டுத்தாக்குதல்களையும் நடத்தின.

அத்துடன், இந்த படை நடவடிக் கைக்கு ஆப்கானிய படையினரும் உதவினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானின் தென்மாநிலமான சாபுல் பகுதியில் நடந்த இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங் களில் ஆப்கானின் பல பகுதிகளிலும் தாக்குதல் நடத்திவிட்டு மலைப் பகுதியில் மறைந்திருந்த அறுநூ றுக்கும் மேற்பட்ட கெரில்லாக்களை குறிவைத்து மேற்படி படைநடவடிக்கை ஆரம்பமானது, படைநடவடிக்கைக்கு போர் விமானங்களே பெரிதும் உத வியுள்ளன.

படைநடவடிக்கையின் முடிவில் 50 கெரில்லாக்களின் உடல்களை படையினர் கண்டெடுத்தனர்; மேலும் 40 பேரை கைது செய்தனர். ஏனை யோர் தப்பியோடியுள்ளனர்.

அந்நிய துருப்பினருக்கு எதிராக புனிதப் போரை நடத்தி வருவதாக கூறும் தலிபான்களின் தாக்குதல் கள் அண்மைக்காலமாக அதிகரித் திருந்தன. இவர்கள் அமெரிக்க ஆதரவு பெற்ற அரச அதிகாரியை யும் தொண்டு நிறுவனப் பணியாளர் களையும் தாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு வாரத்திற்குள் நூற்றுக்கும் மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பென்ர கன் கூறியுள்ளது.



தொடர் குண்டுவெடிப்புகளையடுத்து இந்தியாவின் பிரதான நகரங் களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# முதலிரவை சிறையில் கழித்த மணப்பெண்!

## பிரிட்டனில் பரிதாபச் சம்பவம்

முதலிரவைக் கணவனுடன் கழிக்கவேண்டிய மணப்பெண், சிறையில் கழித்த பரிதாபச் சம்பவம் பிரிட்டனில் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

வின்சன் நகரைச் சேர்ந்த அட்ரியனே சாமன் (வயது18) என்ற இவ ருக்கு கடந்த சனிக்கிழமை திருமணம் நடந்தது.

அன்று மாலை அங்குள்ள நதிக்கரை ஹோட்டலில் வரவேற்பு உபசாரம் நடந்தது.வரவேற்பு உபசாரம் முடியும் முன்பாகவே ஹோட்டல் ஊழியர் கள் அங்கிருந்த மதுபான நிலையத்தை (BAR) மூடிவிட்டனர்.

இதனால் ஆத்திரமுற்ற மணப்பெண், ஹோட்டல் ஊழியர்கள் மீது திரு மணக்கேக் உட்பட கையில் கிடைத்த பொருள்கள் அனைத்தையும் எறிந்தார்.

மணப்பெண்ணின் இந்த நடவடிக்கை குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலீஸார் உடனடியாக வந்து மணப்பெண்ணைக் கைது செய்தனர்.

## 36 ஆண்டுகளுக்கு முன்பு

# மாயமான பிரதமரைக் கண்டுபிடிக்க ஆஸ்திரேலிய அரசு விசாரணை!

36 ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்தி ரேலியாவில் பிரதமராக இருந்த ஹேரல்டு ஹோல்ட் கடலில் குளிக் கச் சென்ற போது மாயமானார். அவ ருக்கு என்ன நடந்தது என்பது இது வரை தெரியவில்லை. இதனால், அவர் என்ன ஆனார் என்று மீண்டும் விசாரிக்க ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்துள் ளது.

ஒருவர் இறந்தால், இறந்தவரின் உடல் கிடைத்தால் மட்டுமே அவர் எப்படி இறந்தார் என்று விசாரிக்க முடியும். உடல் கிடைக்காமல் விசார ணைகளை நடத்த முடியாது என்று சட்டம் இருந்ததால் அப்போது இது குறித்த விசாரணைகள் முழுமை யாக நடைபெறவில்லை. இப்போது அந்தச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. அதனால், இது குறித்த விசாரணை கள் மீண்டும் தொடங்கியுள்ளன.

1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், உலகத்தை படகில் சுற்றி வந்த அலெக்ரோஸை வரவேற்பதற்காக நான்கு நண்பர்களுடன் மெல்போர்ன் அருகே உள்ள கடற்கரைக்கு பிரதமர் ஹோல்ட் சென்றார். அங்கு கடலில் நீந்தும்போது அவர் மாயமானார். மூன்று வாரமாகத் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சீனாவை வேவு பார்த்ததன் கார ணமாக சீனக் கடற்படையினர் அவ ரைக் கடத்தி நீர்மூழ்கிக் கப்பலுக் குக் கொண்டுசென்று இருக்கலாம் என்று அப்போது கூறப்பட்டது. சிலர். அவர் கடலில் மூழ்கி இறந்திருக்க லாம் என்று கூறினர்.

அதேபோல் வியட்நாம் போரில் இருந்து ஆஸ்திரேலிய இராணு வத்தை வாபஸ் பெற விரும்பியதால் அமெரிக்க சீ.ஐ.ஏ. உளவாளிகள் அவரைக் கொலை செய்திருக்கலாம் என்றும் -

தனது காதலியுடன் பிரான்ஸிற்கு ஓடிப் போவதற்காக காணாமல் போவது போல் அவரே நடந்திருக் கலாம் என்றும் - அப்போது பல கார ணங்கள் கூறப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# இரண்டு பலஸ்தீனர்கள் இஸ்ரேலியரால் கைது!

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பலஸ்தீனப்போராளி கள் இருவரை இஸ்ரேலிய இரகசியப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அல்-அக்ஷா மாவீரர் படையணியைச் சேர்ந்தவர்கள்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க் கப்பட்டிருந்த இவர்களைக் கைது செய் வது இவர்களது உயிருக்கு ஆபத்தாக லாம் என்று வைத்தியசாலை வட்டா ரங்கள் கூறியபோதும், தமது அம் புலன்ஸில் இவர்கள் இருவரையும் இஸ்ரேலிய இகசியப் பொலீஸார் ஏற்றிச் சென்றுள்ளனர். இவர்களின் கைதை எதிர்த்துள்ள அல்-அக்ஷா படையணி தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரித் துள்ளது. (ம)

## ஈராக்கில் தாக்குதல்கள் அதிகரித்ததன் எதிரொலி:

# மேலதிக துருப்பை அனுப்புவதற்கு அமெரிக்க நிர்வாகம் பின்னடிப்பு!

அமெரிக்கப் படையினருக்கு எதி ராக ஈராக்கில் தாக்குதல்கள் அதிக ரித்து வருவதையடுத்து, அங்கு மேல திக படையினரை அனுப்ப அமெரிக்க நிர்வாகம் பின்னடித்துள்ளது.

தமது இலக்கை நிறைவேற்ற ஈராக் கில் போதுமான அமெரிக்கப் படை

உலக அரங்கில்

யினர் உள்ளனர் என்று கூறும் அமெரிக் கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட், ஈராக்கிற்கு மேலதிக படைகளை அனுப்பப் போவதில்லை என்றும் கூறி யுள்ளார்.

ஆனால், ஐ.நா.அமைதிப்படையி னரை அங்கு அனுப்புவதற்கு அமெ ரிக்க நிர்வாகம் முயற்சி செய்து வரு கிறது.

அமெரிக்காவின இந்த நடவடிக்கை, அதன் கபடத்தனத்தைக் காட்டுவ தாக தெரிவிக்கப்படுகிறது.

நாளாந்தம் நடைபெறும் தாக்குதல் களால், வியட்நாமில் அமெரிக்கா சந்தித்த அழிவைப் போன்று ஈராக்கி லும் சந்திக்க நேரிடும் என்ற அச்சம் காரணமாகவே மேலதிக படைகளை ஈராக்கிற்கு அனுப்ப அமெரிக்கா பின்ன டிக்கிறது என்று சாரப்பட்ட கருத்துக் கள் தோன்றியுள்ளன.

எதிரிகளின் சவால்களை முறிய டிக்க ஈராக்கிலுள்ள படையினர் போதும் என்று அமெரிக்க கட்டளைத் தளபதி கூறியுள்ளார். அப்படியாயின், ஐ.நா. அமைதிப்படையினரை ஈராக்கிற்கு கொண்டு செல்ல அமெரிக்கா முயல் வது ஏன் என்ற கேள்வியும் எழுந்துள் ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக் கையை பார்க்கும்போது, ஐ.நா. அமை திப்படையை ஈராக்கில் பலிக்கடா வாக்க முயற்சிகள் நடப்பது தெட்டத் தெளிவாகிறது.

பக்தாத்திலுள்ள ஐ.நா. அலுவல கமும், அங்குள்ள ஜோர்தான் தூதர கமும் குண்டுத் தாக்குதலுக்கு இலக் கானதைத் தொடர்ந்து ஈராக்கிற்கு 20,000 படையினரைக் கொண்ட படை யணி ஒன்று அனுப்பப்பட வேண்டு மென அமெரிக்கர்கள் கோரியுள்ள னர்.

## 8 லட்சம் பேர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் நடந்த

# ருவாண்டா ஜனாதிபதித் தேர்தலில் ருட்ஷி இனத்தவர் பெரு வெற்றி!

ருவாண்டா,ஓக.27

1994 ஆம் ஆண்டு எட்டு லட்சம் பேர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் ருவாண்டாவில் நேற்றுமுன்தினம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ருட்ஷி இனத்தவரான போல் ஹக்கமி வெற்றி யீட்டியுள்ளார்.

ருட்ஷி இனத்தவர் 1994 இல் படு கொலை செய்யப்பட்டதை எதிர்த்து புரட்சியில் ஈடுபட்ட இவருக்கு 94 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன.

ஹுட்டு இனத்தீவிரவாதிகளே படுகொலைகளைச் செய்தவர்களா யினும் தற்போதைய தேர்தலில் ஒற்று மையாக நின்று தமது வாக்குகளை அவர்கள் போல் ஹக்கமிக்குச் செலுத் தியுள்ளனர்.

ஹுட்டு இனத்தவரான முன்னாள் பிரதமர் ஊஸ்டின் ருவாகிரமுங்கு வும் ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிட்டிருந்த போதும் அவருக்கு குறிப் பிடும் படியான வாக்குகள் கிடைக்க வில்லை.

ஊஸ்டின் ருவாகிரமுங் மட்டுமே போல் ஹக்கமியை எதிர்த்துப் போட் டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியறிவில் கீழ் நிலையிலுள்ள ருவாண்டா வாசிகள் வேட்பாளரின் படத்துக்கு நேராக தமது பெருவிரல் அடையாளத்தை இட்டு வாக்குகளைச் செலுத்தினர். 80 சதவீதமானோர் தாமாக முன்வந்து வாக்களிப்பில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பி டத்தக்கது.

# சிறையிலிருந்து உயிரணு கடத்திய கைதிக்குத் தண்டனை நீடிப்பு

சிறையிலிருந்து தனது உயிரணு வைக் கடத்தி மனைவியைக் கருத்த ரிக்கச் செய்த கைதிக்கு மேலும் 6 மாதங்கள் தண்டனை அதிகரிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஓலன்வுட் பெடரல் சிறையிலிருந்து மனைவி ரெஜினா கிரானடோ (வயது-40) கருத் தரிக்கச் செய்வதற்காக நியூயோர்க் கில் உள்ள கருத்தரிப்பு மருத்துவம னைக்குத் தமது உயிரணுவை அனுப்பி னார் கொலை, கொள்ளைகளில் ஈடு பட்டதற்காக சிறையில் அடைக்கப்பட்ட கைதி கெவின்கிரானடோ (வயது-40).

இத்தம்பதியினருக்கு தற்போது 3வயதில் அழகான பெண் குழந்தை உள்ளது. சிறையில் பார்வையாளர் கள் அறைக்கு மனைவி ரெஜினாவு டன் வந்த 3 வயது மகளை கெவின் கிரானடோ பாசத்துடன் அழைத்தார். இதையடுத்து சிறை அதிகாரிகளுக்கு அவர் மீது சந்தேகம் வந்தது. 1988 முதல் சிறையில் இருந்து வரும் அவ ருக்குக் குழந்தை பிறந்தது எவ்வாறு என்ற சந்தேகம் வந்தது. இதனைய டுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை யிலேயே உயிரணு கடத்தப்பட்ட விட யம் தெரியவந்தது.

## கணிப்பீடு தொடர்பான கருத்தரங்கு

வலிகாமம்தெற்கு, ஓக.27

இலங்கை பரீட்சை திணைக்களத் தினரால் பாடசாலைத் மட்டக் கணிப்பீடு தொடர்பாக நடத்தப்படும் கருத்தரங கொன்று நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை நான்கு மணிவரை வேம்படி மகளிர் உயர் தரக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கினை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது. இக்கருத்தரங்கில் யாழ்ப்பாண மாவட்ட உயர்கல்வி அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்கு பொறுப பான ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கை பரீட்சைத் திணைக்கள தமிழ்ப்பிரிவு ஆய்வு அபிவிருத்திக் கிளைப் பொறுப்பாளரும் உதவிப் பரீட்சை ஆணையாளருமான ஞ.சொலமன் மேற்படி கருத்தரங்கினை ஒழுங்கு செய்துள்ளார்.

பிரதிப்பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் மற்றும் ஜி.போல் அன்ரனி ஆகியோர் இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். (ம-152)

## வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி கட்டுரைப் போட்டி

வலிகாமம்,ஓக.27

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாண வர்களிடையே கட்டுரைப்போட்டி இடம பெறவுள்ளது.

ஸ்ரீலங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத்தினரால் இவை நடத்தப் படவுள்ளன.

"வெள்ளைப்பிரம்பு பாவிப்பவர்களும் இலங்கைப் பிரஜைகளாவர்" என்ற தலைப்பிலான கருப்பொருள் கட்டுரைப போட்டியில் பயன்படுத்தப்படும். இப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு முதற் பரிசாக ஆயிரம் ரூபாவும் இரண் டாம் பரிசாக 750 ரூபாவும் மூன்றாம் பரிசாக 500ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

12 வயதுக்குட்பட்ட மாணவர்கள 400 சொற்களுக்கு குறையாமலும், 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள 750 சொற்களுக்கு குறையாமலும் தமது கட்டுரைகளை எழுதி, தமது பெயர், வயது, பிறந்த திகதி, கல்வி கற்கும் பாடசாலை என்பவற்றைக் குறிப்பிட்டு, அதிபரால் உறுதி செய்யப பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

கட்டுரைகளை செப்ரெம்பர் 30ஆம திகதிக்கு முன்பாக செயலாளர், இலங்கை கட்புலன் பாதிக்கப்பட்ட வர்களுக்கான சங்கம், இல.74, சேர்ச் வீதி, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-152)

## புத்தளம் ஆர்ப்பாட்டம் பின்போடப்பட்டது

கொழும்பு ஓக.27

நாடாளுமன்ற விவகார அமைச் சரும் புத்தளம் மாவட்ட அபிவிருத் திக்குழுத் தலைவருமான ஏ.எச்.எம். அஸ்வருக்கு எதிராக நேற்று புத்தளத தில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டம் பின்போடப்பட்டிருக்கின்றது. புத்தளம் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் கிளை இதனை நேற்றுத் தெரிவித்தது.


### இந்திய ஸ்தல யாத்திரை

யாத்திரையில் பங்குபற்ற விரும்புபவர்கள் 01.09.2003இற்கு முன்பு பதிவுசெய்துகொள்ளவும். 15.09.2003 அளவில் யாத்திரை ஆரம்பமாகும.

தொடர்பு:
ராகவேந்திர ஆலயம்,
நல்லூர்.
T.P 0777 110 329
(21850)

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய சுருக்குக் கதவு கள் முன்பக்க தகடுகள், 19 கேஜ் பொருத்தப்பட்டது.
16 X 9½ (இரண்டு கதவுகள்)
8 X 9½ (ஒரு கதவு) சதுர அடி 325/-
பாவனையிலுள்ள WINDOW TYPE AIR CONDITION ரூபா 15000/=, புதிய மரக்கடைச்சல் இயந் திரம் 12000/= விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
இல.41, நாயன்மார் வீதி,
நல்லூர்.
T.P. 0777 544530
(21-11-17)

### மலிவு விலையில் புத்தகங்கள்

நல்லூர்க் கந்தன்
மஹோற்சவத்தை முன்னிட்டு சகலருக்கும் சகல புத்தகங்களும்

**10% கழிவுடன்**

★ புதிய கெம்பியூட்டர் நூல்கள்
★ இந்துசமய இலக்கியங்கள்
★ சிறுவர் கதைகள், பாடல்கள்

இன்னும் பலப்பல!

பொது அறிவு ~ திரு.வே.தபேந்திரன் B.Com.
(புதிய பதிப்பு)

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (நல்லூர் சிவாலயம் முன்பாக).
தொலைபேசி: 222 2573.
(சி-29763) (21-11-17)

### சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு!


உங்கள் சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குரிய அனைத்துப் பொருள்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**இதோ!..... உங்களுக்காக**

* பேரம் (BAYRUM)
* ஆவ்ரசேவ் (AFTER SHAVE)
* பேப்பர் சேவியற்ஸ் (PAPER SERVIETTES)
* சேவிங் சோப் (SHAVING SOAP)

**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
குறிப்பு:- (சத்திரத்துச் சந்திக்கு அருகில்).
(11-17-24) ☎ 021-222 2567 (C/29731)

### ஜே.கே. அரம் மற்றும் டிரில் பிட்ஸ்



உலகளாவிய ரீதியில் அரங்களின் பாரிய உற்பத்தியாளர்கள்

இலங்கையில் ஏக முகவர்

**ஜெனரல் இக்விப்மன்ட்ஸ் லிமிட்ட்**
316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799
பக்ஸ்: 2434637

உ
ஓம் ஸ்ரீ சாயிராம்!

**CEYLON MEDICAL COLLEGE COUNCIL**
**PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION 2004/2005**

புதிய வகுப்புகள், மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 28.08.2003 வியாழக்கிழமை காலை
**SAI RAM PHARMACY EDUCATION, COLLEGE OF DEGREE STUDIES**
57/13, STANLEY ROAD, JAFFNA

**சாயி ராம் பார்மஸி**
**பட்டப்படிப்புகள் கல்லூரி**

குறைந்தபட்ச தகைமைகள்:
G.C.E. O/L With CREDIT PASS IN SCIENCE AND SIMPLE PASS IN ENGLISH & MATHS (26-21-11-17)

ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு பொருத்தமானது.
☞ கற்கைநெறி அனுமதிக்கும் மேலதிக விவரங்களுக்கும் எதிர்வரும் 28.08.2003 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். (21479)


### 13ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 18 - 06 - 1933
மறைவு 20 - 08 - 1990

(தோலகட்டி, வயாவிளான்)

**அமரர் வைத்திலிங்கம் நடராசா**

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேச சபை, அச்சுவேலி)

திதி: 27.08.2003

அன்பு அப்பாவே!
ஆண்டுகள் 13ஓடி மறைந்தாலும் உங்கள்
பாசங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் அகலாது!
ஆண்டு ஒன்று தவறாமல் ஆத்மசாந்தி
நினைவாக கந்தன் தீர்த்தத்தன்று, கந்தன்
காலடிக்கு கண்ணீர்ப் பூக்களால் நினைவுகூரும் நாங்கள்!

"துஷா இல்லம்",
கற்பக்குனை,
உடுவில், சுன்னாகம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(21769)(26-11-17)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 04 - 04 - 1960
விண்ணில் 29 - 07 - 2003

**அமரர் மரியதுரை அமலதாஸ்**

பண்பின் கணவனாய்
பாசத்தின் தந்தையாய் இருந்து
ஆனதோ முப்பத்தொன்று நீர் மறைந்து.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மனற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நாளை (28.08.2003) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
மனைவி அ.வசந்தி,
மணற்காடு. (21838) (26)

இவரின் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.


### SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

be sharp



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up
Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

உதயன்

## தமிழரின் பலத்தைப் புரிந்துகொள்ளுங்கள்

"புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தை அரசு உடனடியாக வழங்கவேண்டும்."

புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அரசியல் முறையே சரியான தீர்வு என பல வருடங்களாக நாம் வலியுறுத்தி வந்தோம். ஆனால், ஆட்சிக்கு வந்த எந்த அரசும் அதற்கு இணங்கவும் இல்லை; அதற்கான முயற்சிகளின் ஈடுபடவும் இல்லை. இப்போது நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இவ்வேளையில், இடைக்கால நிர்வாகம் குறித்து பேசப்படுகின்றது. இனவாதிகளின் கூச்சல்களுக்கு அரசு எடுபடாமல், தமிழரின் நலன் கருதி அந்த இடைக்கால நிர்வாகம் நடைமுறைக்கு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை ஆரம்பத்தில் சாத்வீக வழிகளிலேயே மேற்கொணடனர். அது வெற்றியளிக்கவில்லை. அவர்களின் நியாயமான போராட்டத்தை ஆயுதப்பலம் கொண்டு அடக்கி, ஒடுக்கின சிங்களப் பேரினவாத அரசுகள். அதனால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதவழியை நாடினார்கள்.

தமிழ் இளைஞர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை அரசபடைகளால் வெற்றிகொள்ள முடியவில்லை என்பதை கலாநிதி கருணாரத்ன சுட்டிக்காட்டுகின்றார்.

தமிழ்மக்களின் உரிமைகளைத் தட்டிப்பறித்துக் கொண்டு நாட்டில் அபிவிருத்தியைக் கண்டுவிட முடியாது. யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்துவதாலும் நாடு நன்மையடையப்போவதில்லை. இதனைப் பதவியில் இருந்த அரசுகள் சரியாக உணரத் தவறிவிட்டன.

எனவே, எப்படியும் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரமபிக்கப்படவேண்டும். அதற்கு வாயப்பளிப்பதாயின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான புலிகளின் - தமிழ் மக்களின் - நியாயமான கோரிக்கையை ஏற்று அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவது அவசியம் என்றும் கலாநிதி கருணாரத்ன தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் வெறும் அரசியலமைப்பு ஒன்றைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஈழத்தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் மட்டுமல்லர். அதற்கு அப்பால் தமது மக்களுக்கென தனியான இராணுவம், தனியான பொலீஸ், தனியான கடற்படை ஆகியவற்றைக் கொண்ட - உலகிலேயே சிறந்த புரட்சிப் போராளிகளாக மதிக்கப்படுகின்ற - விடுதலை இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள். ஈழத்தமிழரின் பூர்வீக தாயகத்தில் கணிசமான பிரதேசம் அவர்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. அங்கு தமக்கென ஒரு நிர்வாகக் கட்டமைப்பை அவர்கள் வைத்திருக்கின்றார்கள். அங்கு தனி நீதிமன்றங்கள், நீதி - நிர்வாக முறைமை போன்றவற்றை அவர்கள் பேணுகின்றார்கள்.

மொத்தத்தில் தனிநாடு ஒன்றைப் பிரகடனப்படுத்தக்கூடிய கட்டத்தின் எல்லையில் பெரும் பலத்தோடு நின்றுகொண்டுதான், ஐக்கிய இலங்கைக்குள் - சமஷ்டி அடிப்படையில் - பேச்சுமூலம் - அமைதித்தீர்வு காணத் தாங்கள் தயாரென அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்தத் தீர்வுக்காக யுத்தநிறுத்தம் செய்து இதயசுத்தியோடு செயற்படுகின்றார்கள்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் புலிகளின் நிலைப்பாட்டைப் புரிந்துகொண்டு, இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதன் மூலம் சமாதானப்பேச்சுக்களை மீண்டும் அதன் சரியான தடத்துக்கு மாற்றுவதுதான் இன்றைய நிலையில் உசிதமானதாகும்.

அதை விட்டுவிட்டு, ஜனாதிபதி குமாரதுங்காவும் அவரது அணியினரும் கூறுவதுபோல - விடுதலைப் புலிகளை ஏதோ காட்டில் தலைமறைவாகியிருக்கும் ஒரு சிறிய இயக்கம் போலவும், அரசு விதிக்கும் நெறமுறைகளுக்கு அமைய அது செயலாற்றினால் மட்டுமே அதனுடு பேச்சு நடத்தலாம் என்ற அடிப்படையிலும் இவ்விடயத்தை அரசு அணுகுமானால் இடைநிறுத்தப்பட்ட சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பே கிட்டாமல் போகும். இந்த யதார்த்தத்தை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்வது நல்லது.

பலவீனமான நிலையில் அல்ல, பலத்தோடு நின்றுகொண்டுதான் தமிழர்கள் சமாதான - சமரச- பாதைக்கு வந்திருக்கின்றார்கள். அமைதி முயற்சிகளில் அந்தப் பலத்துக்கு உரிய மதிப்பும், மரியாதையும் கிட்டும் என்ற நம்பிக்கையுடன்தான் அவர்கள் இந்த அமைதி முயற்சிகளில் நின்று, நிலைத்து நிடிக்கின்றார்கள். அமைதிநிலை தொடர்ந்தும் நீடிப்பது அதில்தான் தங்கியுள்ளது.

# வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரிக்கும் முயற்சி தனித் தமிழீழத்தை உருவாக்கும் அடித்தளம்

### திலீபன் நினைவுத்தூபி திறப்பு விழாவில் சிவாஜிலிங்கம் எம்.பி. உரை

யாழ்ப்பாணம்,ஓக.27

வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனித் தனியாக பிரிப்பதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சி தனித் தமிழீழத்தை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமையும்.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

நேறறுமுன்தினம் நல்லூர் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள புனரமைப்புச் செய்யப்பட்ட தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபி திறப்பு விழாவில் நினைவுரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எம்.கே.சிவாஜிலிங்கம் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழத் தேசியப் போராட்ட வரலாற்றின் ஆரம்ப காலங்களில் எமது தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட அஹிம்சைப் போராட்டங்கள் ஆயுதமுனையில் அடக்கி ஒடுக்கப்பட்டன. அதன் விளைவாக உருவாகிய இளைஞர்களின் ஆயுதப் பேராட்ட எழுச்சியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் தியாகி திலீபன்.

இருந்தபோதும், இலங்கையும் இந்தியாவும் செய்துகொண்ட நயவஞ்சகமான ஒப்பந்தம் காரணமாக தமிழர்களின் விடிவிற்காக உண்ணாநோன்பிருந்து தனது உயிரை அஹிம்சை வழியில் இந்த மண்ணுக்கு அர்ப்பணித்தார் அவர்.

இவர் போன்றோர் செய்த தியாகத்தின் விளைவாகத்தான் இந்தியத் தமிழர்களுக்கு வேண்டிய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காவிட்டாலும் வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயக பூமி என்பதனை தாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக்கொண்டது.

புலிகள் தற்போது இடைக்கால நிர்வாக சபையைக் கேட்கின்றபோதும் அதனை வழங்குவதற்கு அரசு தயக்கம் காட்டி வருகின்றது.

இடைக்கால நிர்வாக சபையை வழங்க பேரினவாத சக்திகள் தயக்கம் காட்டிவருகின்றன. அவர்கள் தங்களைத் தாங்கள் ஆள்வதற்காக இந்த இடைக்கால நிர்வாக சபையை கேட்கவில்லை. அழிந்துபோயுள்ள வடக்கு - கிழக்குப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கும் கட்டியெழுப்புவதற்குமாகவே கேட்கின்றனர்.

தற்போது நிலவும் சமாதான சூழ்நிலையை குழப்புவதற்கு தென்னிலங்கையிலுள்ள பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற கட்சிகளுடன் இணைந்து ஜனாதிபதி சந்திரிகா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இடைக்கால நிர்வாக சபையை உடனடியாக வழங்குவதற்குப் பதிலாக பல்வேறுபட்ட முன்வரைபுகளை முன்வைத்து அரசு காலத்தை வீணடிக்கின்றது.

அரசினால் இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால சட்ட வரைவு தொடர்பாக பரீஸ் நகரிலே கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்படும் இறுதி வரைபை சிங்கள அரசும் பேரினவாதக் கட்சிகளும் நிராகரிக்குமேயானால் மீண்டும் ஒரு தமிழீழ பேராட்டத்தின் மூலம் எமது இலக்கை அடைவோம். இதனைத் தவிர தமிழ்மக்களுக்கு வேறெந்த மார்க்கமும் இல்லை.

ஜனாதிபதி சந்திரிகா வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு ஜனாதிபதி முயற்சி எடுத்தால் இலங்கைத்தீவில் இருந்து தனித் தமிழீழம் உருவாவதனை எவராலும் தடுக்கமுடியாது. இதனை நாம் நாடாளு மன்றத்தில் தெளிவாகக் கூறியுள்ளோம். - என்றார்.

(ம-5-86-ரி)

# பலாலி பாதுகாப்பு முன்னரங்கை அண்டிய குடியிருப்புகளில் புதிதாகக் குடியமரத் தடை

தெல்லிப்பழை,ஓக.27

பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியின் முன்னரங்க பாதுகாப்பு எல்லையை அண்டிய மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் புதிதாக எவரும் குடியமரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் தமது சொந்த வீடுகளைக் கொண்டிருப்போர் மீளக்குடியமர விரும்பின் தமது கிராம அலுவலர்களூடாக பலாலி இராணுவத் தலைமையகத்திடம் அனுமதி பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலாலி இராணுவத் தளத்தின் முன்னரங்க நிலைகளுக்கு அருகில் உள்ள குப்பிளான் வடக்குப் பகுதி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பின்புறமாக உள்ள பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலேயே புதிதாக எவரும் குடியமர அனுமதிக்கப்படமாட்டார்களென படைத் தரப்பில் ஏற்கனவே இப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி முன்னரங்க நிலைகளிலிருந்து 600 மீற்றர் தூரத்துக்குள் உள்ள இடங்களிலேயே மக்கள் புதிதாக குடியேறவும் பயிர்ச் செய்கையிலீடுபடவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது முகாம் முன்னரங்கை அண்டிய குடியிருப்புப் பகுதிகளிலும் புதிதாக எவரும் குடியமர அனுமதிக்கப்படமாட்டார்கள் என படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இப்பகுதிகளில் தமது சொந்தக் காணிகள், வீடுகள் இருந்து அவற்றில் குடியமர விரும்புவோர் தமது கிராம அலுவலர்களூடாக பலாலி இராணுவத் தலைமையகத்துக்கு விண்ணப்பித்து அனுமதி கிடைத்தாலேயே குடியமரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - தமது முன்னரங்க நிலைகளை அண்டிய குடியிருப்புகளில் படையினர் அடிக்கடி சோதனையில் ஈடுபடுவதோடு குடும்ப அட்டைகளையும் பரிசீலித்து வருகின்றனர்.

(ம-150)

## கிணற்றில் தவறிவீழ்ந்து சிறுவன் பரிதாபமாக பலி!

தென்மராட்சி.ஓக.27

கிணற்றிலிருந்து கப்பிமூலம் தண்ணீர் எடுக்க முயன்ற ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் தவறிக் கிணற்றுக்குள் வீழ்ந்து பலியான சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி, கச்சாய் வீதி, வீரபத்திரர் கோவிலுக்கு அருகில் இடம்பெற்றது.

இதேயிடத்தைச் சேர்ந்த மகேந்திரன் ஜதுஷன் என்னும் சிறுவனே பலியானவர் ஆவார்.

இச்சிறுவனின் பெற்றோர் சந்தைக்குச் சென்றதால் பக்கத்து வீட்டுக்கு விளையாடச் சென்ற இச்சிறுவன் கிணற்றில் தண்ணீர் எடுத்தபோதே தவறிவீழ்ந்ததாகவும்-

சந்தையிலிருந்து திரும்பிய பெற்றோர் சிறுவனைத் தேடியபோது கிணற்றில் சடலமாகக் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

# இளம் குடும்பஸ்தரை ஓட்டோவுடன் காணோம்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம்,ஓக.27

ஓட்டோ சாரதியான இளம் குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

றக்கா றோட், சுண்டிக்குளியைச் சேர்ந்த தாவீது ஜெயக்கொடி (வயது 31) என்ற இளம் குடும்பஸ்தரே நேற்றுமுன்தினம் முதல் காணாமற்போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது ஓட்டோவை சென். ஜோண் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் உள்ள தரிப்பிடத்தில் நிறுத்தியிருந்தபோது, அவ்விடத்திற்கு வந்த நபர் ஒருவர் மேற்படி ஓட்டோவுடன் அழைத்துச்சென்றதாகவும் அதன் பின் ஓட்டோ சாரதி வீடு வந்து சேரவில்லை எனவும் அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்த இளம் குடும்பஸ்தர் காணாமற்போனமை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பணிமயை மற்றும் யாழ். - நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பணிமனைகளிலும் முறையிடப்பட்டுள்ளது.

(ம-5)

**நாளை**

ஆவணி 11
வியாழக்கிழமை
(28.08.2003)
திதி : பிரதமை
முன்னிரவு 10.35 வரை
நட்சத்திரம் : மகம்
காலை 6.08 வரை
சுபநேரம் : 7.35 - 9.05
ராகுகாலம்: 1.35-3.05
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

சில பணக்காரர்களின் சுகங்கள் சில ஏழைகளின் கண்ணீரை விலைகொடுத்து வாங்கப்பட்டவையாகும்.



மாணவர்கள் 'உதயன்' அலுவலகத்துக்கு வந்தசமயம் எடுக்கப்பட்ட படம்.

# தென்பகுதி மாணவர்கள் குடாநாட்டுக்கு வருகை

### இங்குள்ள மாணவர் பிரச்சினைகளை ஆராய்வர்

யாழ்ப்பாணம்,ஓக.27

ஸ்ரீலங்கா இன்ரறக்ரிவ் மீடியா குறூப்பைச் சேர்ந்த 62 மாணவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

இந்த 62 மாணவர்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் தெலுங்கு இனங்களைச் சேர்ந்த மாணவர்கள் அடங்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் இங்கு வந்த இவர்கள் யாழ்.குடா நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள பற்றியும் அவர்களின் தேவைகள் பற்றியும் கண்டறியவுள்ளனர்.

அத்துடன், உலக சிறுவர் தினமான ஒக்ரோபர் மாதம் முதல்[illegible] திகதி கொழும்பில் நடைபெறவுள்ள சிறுவர் மாநாட்டில் [illegible]நாட்டுச் சிறுவர்களையும் இணைத்துக்கொள்வதற்கு ஆத[illegible] கோரவுள்ளனர்.

[illegible]நாட்டு மாணவர்களுடன் இவர்கள் கல்வி தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடியபோது, தமக்கு இலவச பாடநூல்கள் ஒழுங்காகக் கிடைப்பதில்லை எனவும் ஆய்வுகூட வசதிகள் பாடசாலைகளில் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். இப்பிரச்சினைகள் தமக்கும் உள்ளதாகத் தெரிவித்த தென் பகுதி மாணவர்கள் தெற்கு மற்றும் வடக்கு மாணவர்கள் இணைந்து இதுவிடயம் பற்றி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்போம் எனத் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இக்குழுவினர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்துக்குச் சென்று கலந்துரையாடியதுடன் நேற்று கரையோரப் பகுதிப் பாடசாலைகள் சிலவற்றுக்கும் சென்றனர்.

(ம-10)

# 7ஆவது வருட நினைவஞ்சலி

மலர்வு 21 - 03 - 1978



உதிர்வு 15 - 09 - 1996

## அமரர் சந்திரசேகரம் சந்திரகாந்தன்

(மாணவன், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

பாசமுள்ள அன்பு மகனே! எங்கள் அன்புச் செல்வமே!!
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உமது நினைவுகள்
எம்மை விட்டு என்றுமே நீங்காது சந்திரகாந்தனே!

என்றும் பாசமுள்ள:
அம்மா, அண்ணாமார்,
அண்ணி மற்றும்
உறவினர்கள்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

(21847)(26-24-11-15)

# 45 ஆம் நாள் நினைவுகளில்....

மலர்வு 17 - 02 - 1974



உதிர்வு 14 - 07 - 2003

## அமரர் தவராசா புவனேஸ்வரன்

(புவனம்)

உயர்குணம் தனில் உயர்ந்தவனே!
எம் உளம்தனில் நிறைந்தவனே!
உதட்டுள் நகைக்கும் உத்தமனே!
எம் இல்லத்தின் குல தெய்வமே!
கட்டினோம் கோவில் இல்லத்தில் - மட்டுமல்ல
உடைந்து போன எம் உள்ளங்களிலும்!
என்றும் அழியாது உன் நினைவுகளால்
ஏற்றிய நினைவு திபம்......!

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

(21865) (19-24-11-15)

# அந்தியேட்டி அழைப்பு



காலஞ்சென்ற எமது இல்லத்தரசி

## திருமதி தெய்வேந்திரம் கௌசலாதேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28-08-2003) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் நடைபெறும். அத்துடன், தொடர்ந்து நடைபெறவுள்ள சபிண்டிகரணக் கிரியைகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புக் கணவர்
திரு. சி. தெய்வேந்திரம் மற்றும்
க.பாலசுப்பிரமணியம்
(சகோதரர்),
பிள்ளைகள்.

"மங்களகிரி"
பண்டைத் வீதி,
உடுப்பிட்டி.

(21866) (19-24-11-15)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித் திங்கள் 12 ஆம் நாள் (29.08.2003) வெள்ளிக்கிழமை காலை 9.05 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள உத்தர நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய துலா லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்.

திரு.திருமதி பசுபதி சிவப்பிரகாசம்
தம்பதிகளின் ஏகபுத்திரன்
திருவளர் செல்வன்
**பிரசாத்**
அவர்களுக்கும்

திரு.திருமதி துரைராசா பிறேம்குமார்
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**ரேகா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று திருமாங்கல்யதாரணம் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் திருமண வைபவத்துக்கு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி பசுபதி சிவப்பிரகாசம்
"ஸ்ரீகலா", கிழக்கு வீதி,
வல்வெட்டித்துறை.
☎ 021-226-3180 (21342)

திரு. திருமதி துரைராசா அருணாசலம்
ஏ.ஜி.ஏ. ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(இருவீட்டார் அழைப்பு)
தனிப்பட்ட அழைப்புகள் இல்லை (24-11-15)

உ



# தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய

சுபானு வருட

# மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2003

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வே
ளேறிய மஞ்ஞை வாழ்க யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

நிகழும் சுபானு வருடம் ஆவணி மாதம் 10ஆம் நாள்
இன்று (27.08.2003) புதன்கிழமை பின்னிரவு 1.36 மணியளவில்
கொடியேற்ற வைபவத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகும்.
5ஆம் திருவிழா ஆவணி 14 ஞாயிறு (31.08.2003)
காலைத் திருவிழா 8.00 மணிக்கு ஆரம்பம்.
அன்று சதுர்த்தி மாலை 4.00 மணியளவில்
விநாயகர், வேலவர் எழுந்தருளல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10ஆம் திருவிழா | பூங்காவனம் | ஆவணி 19 | வெள்ளிக்கிழமை | 05.09.2003 | காலை 9.00 மணி |
| 11ஆம் திருவிழா | கைலாசவாகனம் | ஆவணி 20 | சனிக்கிழமை | 06.09.2003 | காலை 8.00 மணி |
| | சப்பரத்திருவிழா | ஆவணி 22 | திங்கட்கிழமை | 08.09.2003 | மாலை 5.00 மணி |
| | தேர்த்திருவிழா | ஆவணி 23 | செவ்வாய்க்கிழமை | 09.09.2003 | காலை 8.30 மணி |
| | தீர்த்தத்திருவிழா | ஆவணி 24 | புதன்கிழமை | 10.09.2003 | காலை 8.00 மணி |
| அன்று மாலை | மௌனத்திருவிழா | ஆவணி 24 | புதன்கிழமை | 10.09.2003 | மாலை 5.00 மணி |

## பிரதம குருக்கள்:

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகசாமி ஐயர் - சிவசண்முகஐயர்

*முக்கிய குறிப்பு:* காலைத் திருவிழா 8.00 மணிக்கும்,
இரவுத் திருவிழா 4.30 மணிக்கும் நடைபெறும்.

அடியார்கள் ஆலயத்திருவிழா மற்றும் அன்னதானம்,
திருமணம் சம்பந்தமான கைங்கரியங்களுக்கும் சகலவிதமான
நேர்த்திகளுக்கும் களஞ்சிய அறையில் மட்டும் தொடர்புகொள்ளவும்.

*மடம் கட்ட விரும்பும் அடியார்கள் என்னுடன் தொடர்புகொள்ளவும்.*

*சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும், அதன் நிர்வாகிக்கும்,
சந்நிதி கோயிலுடனும் அதன் நிர்வாகத்துடனும்
எந்தவித தொடர்புமில்லை. இவர் இந்திய வம்சாவளியினர் என்பதை
அடியார்களுக்கு அறியத்தருகின்றேன்.*

குறிப்பு: உற்சவ காலங்களிலும் திருமணம் வழமைபோல
நடைபெறும்.

ஆலய உரிமையாளர்

## தங்கராசா ஐயர் - கனகேந்திரம் ஐயர் - (550191431X)

(21856) (24-11-15)

# புலிகளைக் கையாள இலங்கைக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும்

## முன்னாள் தூதுவர் டிக்ஷிற் கூறுகிறார்

கொழும்பு,ஓக.27

விடுதலைப் புலிகளின் குறிக்கோள், பலம் ஆகியவை தொடர்பான யதார்த்தங்களைக் கவனத்திற்கொண்டு சமாதான நடைமுறைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கி வரவேண்டுமென்று இந்தியாவின் முன்னாள் இலங்கைக்கான தூதுவர் ஜே.என்.டிக்ஷிற் கூறுகின்றார்.

அரசியல், தந்திரோபாய ரீதிகளில் இலங்கை அரசாங்கத்தை இந்தியா பலப்படுத்த வேண்டும் எனவும் அவ்வாறானால், எதிர்வரும் வாரங்களில் பலமான நிலையிலிருந்து விடுதலைப் புலிகளுடன் இலங்கை பேரம்பேசமுடியும் எனவும் டிக்ஷிற் கூறினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சில் முன்னர் செயலாளர் பதவி வகிதத இவர், இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு வரைந்திருக்கும் ஒரு கட்டுரையிலேயே இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

இராணுவப் பலத்தைப் பொறுத்தவரை களநிலைமை புலிகளுக்கு வாய்ப்பாக இருப்பதாகவும் புலிகளின் ஆயுத, ஆட்பலம் பெருகியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கும் டிக்ஷிற் தனது கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நோர்வேயின் சமாதான முன்முயற்சியில் புலிகள் ஏன் பங்கு பற்றுகின்றனர்? அதன் பலத்துக்கும் விட்டுக்கொடுக்காத பேரப்பேச்சு நிலைக்கும் மத்தியில் ஏன் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுகின்றனர்? என்ற கேள்விகள் எழலாம். விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக அறிவித்த அமெரிக்காவின் நடவடிக்கையே இதற்கான முக்கியகாரணமாகும்.

எனவே, ஓர் அரசியல் அமைப்பாக சட்டபூர்வ அந்தஸ்து பெற, பயங்கரவாத 'லேபிளை'க் களைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது விடுதலைப் புலிகளுக்கு தர்க்க ரீதியானதாகும். ஆயினும், இந்தக் குறிக்கோள் தனது அடிப்படைக் கோரிக்கைகளில் சிலவற்றை விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுக்கச் செய்யாது இலங்கையில் தனியான தமிழ் அரசை அமைப்பதே புலிகளின் குறிக்கோளாக இருந்து வருகின்றது.

தனது ஐக்கியத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் தொடர்ந்து பேணிவர இலங்கை அரசாங்கத்திற்கு உலகின் பெரும்பாலான நாடுகளின் ஆதரவு உண்டு.

இதனைவிட, புலிகளின் அரசியல் அரசமைப்பு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள உலகம் விரும்பவில்லை என்பது மேலதிகமான ஒரு காரணமாகும்.

- இவ்வாறு கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# இலங்கையிலுள்ள வெளிநாட்டு வங்கிகள் அபிவிருத்திப் பணிகளுக்கும் உதவுகின்றன

## மத்திய வங்கி ஆளுநர் கருத்து

கொழும்பு,ஓக.26

இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு வங்கிகள் அதன் நடவடிக்கைகளை வர்த்தக ரீதியாக மட்டும் பயன்படுத்தவில்லை. இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றன. இது வரவேற்புக்குரிய விடயமாகும். வர்த்தக ரீதியாக இயங்கவுள்ள யூனியன் வங்கியும் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவிகளை வழங்கி செயற்பட முன்வரவேண்டும்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு தர்மபால மாவத்தையில் பாகிஸ்தான் யூனியன் வங்கியைத் திறந்துவைத்து உரையாற்றிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் எஸ்.ஏ.ஜயவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தனியார் வங்கியாக பாகிஸ்தான் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட யூனியன் வங்கி, அந்நாட்டில் 48 கிளைகளுடன் இயங்குவது பாராட்டுக்குரியது. இலங்கையில் அதுபோன்று பல கிளைகளை அமைத்து எமது நகர்புறக் கிராம மக்களுக்கு நல்ல சேவையை வழங்கவேண்டும்.

இலங்கையில் தோன்றிவரும் சமாதானச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டே வங்கி இங்கு நிறுவப்பட்டது. இதன் சேவையை விரிவுபடுத்துவதற்கான சகல உதவிகளையும் மத்திய வங்கி வழங்கி செயற்படும். - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் யூனியன் வங்கிகளின் தலைவர் சோக்கத்தரின் கூறியதாவது:-

பாகிஸ்தானில் 1991ஆம் ஆண்டு எமது வங்கித்துறை ஆரம்பமானது. இன்று பல கிளைகளைக் கொண்டு இரண்டாயிரம் ஊழியர்களுடன் பாகிஸ்தானில் செயறபடுகிறது. 4,000 கோடி ரூபாவை பாகிஸ்தானில் முதலடாகக் கொண்டுள்ளது. அமெரிகா, ஜப்பான் முதலான நாடுகளிலும் எமது கிளைகள் உள்ளன.

இலங்கையில் நிலவும் சமாதானச் சூழலினால் இங்கும் எமது கிளையை நிறுவி செயற்படுவதென தீர்மானித்தோம். நாம் வர்த்தகத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு செயற்படாது அபிவிருத்திப் பணிகளுக்கும் நிதி உதவிகளை வழங்குவோம். 500 கோடி ரூபாவுடன் எமது வங்கி இங்கு ஆரம்பிக்கப்படுகிறது. இவ்வருட இறுதிக்குள் கொழும்புக்கு அப்பாலும் கிளைகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சர்வதேச வங்கியாகச் செயற்படுவதே எமது பிரதான நோக்கமாகும் இவ்வாறு ,அவர் மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் யூனியன் வங்கியின் சர்வதேச நிறைவேற்றுப் பணிப்பாளர் முனீகமால், வங்கியின் திட்டமிடல், அபிவிருத்திப் பணிப்பாளர் அசீப்சனா முதலானோரும் உரையாற்றினர். (எ)

# யாழ்.மாவட்டத்தில் 'அமடா' பணிகளை ஆரம்பித்தது

யாழ்ப்பாணம்,ஓக.27

ஜப்பானைச் சேர்ந்த 'அமடா' (Amda) என்ற அரசசார்பற்ற நிறுவனம் யாழ். மாவட்டத்தில் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

இந்த அமைப்பு தனது சமூக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் தென்மராட்சியில் இரு கிராமங்களைத் தெரிவுசெய்து அங்கு பணிகளை ஆரம்பித்துள்ளது.

இக்கிராமங்களில் மீளக்குடியமர்ந்த மக்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை அந்த அமைப்பு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சனசமூக நிலையங்கள் ஊடாக பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு இந்த அமைப்பு உதவிகளை வழங்கிவருகின்றது.

இந்நிறுவனம் தங்களால் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் ஒன்றான மட்டுவில் வடக்கில் யுத்தத்தால் சேதமடைந்துள்ள சிறிவேற்பிள்ளை சனசமூகநிலையத்தை புனர்நிர்மாணம் செய்யும் பணியையும் மற்றைய கிராமமான கைதடி - நாவற்குழி தெற்கில் புதிதாக ஒரு சனசமூகநிலையத்தை நிர்மாணிக்கும் பணியையும் ஆரம்பித்துள்ளது.

இந்நிறுவனத்தின் யாழ்ப்பாண அலுவல்கம் இல.34, ஆசீர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ளது. இதன் இலங்கைக்கான பிரதிநிதியாக செல்வி யோசிமி சீயும் யாழ்.திட்ட இணைப்பாளராக கிரோயுகி ஒக்காசாகியும் பணிபுரிகின்றனர். (ஒ-3)

### யாழ். ஒஸ்மானியா பகுதியில்

# அரசியல்துறை தலையீட்டால் பெரும் மோதல் தவிர்ப்பு

தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர் குழுக்களிடையே ஏற்பட இருந்த மோதல் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரின் தலையீட்டால் தவிர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை அப்பகுதி வீதிவழியே சென்று கொண்டிருந்த இரு முஸ்லிம் இளைஞர்களுக்கும் வீதியில் நின்ற இரு தமிழ் இளைஞர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, அப்பகுதியில் முஸ்லிம் இளைஞர்களும் தமிழ் இளைஞர்களும் திரண்டதுடன் இரு பகுதியினரும் மோதலுக்கும் ஆயத்தமானார்கள்

இதுகுறித்து, அறிந்த யாழ். மாவட்ட அரசியல் துறைப் பணிமனையினர் அவ்விடத்திற்குச் சென்றதுடன் அங்கு ஏற்பட்டிருந்த முறுகல் நிலையையும் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

குறிப்பிட்ட மோதலுக்குக் காரணமான இரு தமிழ் இளைஞர்களும் அரசியல்துறையினரால் எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஒ-12)

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் என்.வி.எம். நவரத்தினத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - ஆர்.ராதாகிருஷ்ணன், மிருதங்கம் - கே.கண்ணதாசன், முகர்சிங் - கே.நந்தகுமார், கெஞ்சிரா - இரா.சிவராமன், கடம் - ஏ.செல்வரத்தினம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-10)

★ ★ ★

நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 6மணிக்கு 'வலை வீசிய பரமன்' பற்றி சிவஸ்ரீ சி.வைத்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-10)

★ ★ ★

வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டு வரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு நல்லைச் சகோதரிகள் கஜந்தினி குலநாயகம், சிவாஜினி கணேசலிங்கம் ஆகியோரின் 'நல்லூர் உற்சவகாலப் பல்லவி' இடம்பெறும். (எ-10)

★ ★ ★


'புலிகளின் குரல்' ஏற்பாட்டில் ஆலயதெற்கு வீதியில் மாலை 6 மணிக்கு ஜோன் கபாஸின் ஆர்மோனியக் கச்சேரியும் சாரங்கா இசைக் குழுவின் எழுச்சி கானங்களும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நடத்தும் இசை நிகழ்வுகள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.45 மணிவரையும் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

25ஆம் திருவிழா (தீர்த்தம்)



## நல்லைநகர் மேவி உறை வடிவேலா

பொங்கும் எழில் தோகை மயில் தனில் - ஏறி
தங்கமுக தையல் இரு தோள் சேர
நல்லை நகர் மேவி உரை - வடிவேலா
நல்ல தமிழ் போற்றும் இன்ப குமரேசா
இன்னல் தரும் இழுபறிகள் குறையாதா?
இன்பநிலை தமிழர் மண்ணில் விடியாதா?
துயர் வடிந்து சுகம் நிறைந்து வரவேண்டும்
பாடும் அன்பர் இதயம் நிறை அழகோனே
பக்தர் நிறை நல்லையுறை பெருமாளே.

- புஸ்பராஜா சுஜீபா
இணுவில்.

## வருவான் அருள்தருவான்

நல்லைத் திருநகர் வாசன் – அன்பர்
நாடித் தொழும்முரு கேசன் – அவன்
நாட்டில்பகை ஓட்டிப்பரி வூட்டிக்கழல் காட்டும்குரு
நாதன் வெட்சி போதன்!

வந்த வினைகளை ஓட்டி – கந்தன்
வாழவைப் பான்வழி காட்டி – அவன்
மயில்மீதினில் அடியார்துயர் பொடியாக்கிட வடிவேலுடன்
வருவான் அருள் தருவான்!

காவடி தூக்கிநின் றாடு – நல்லைக்
கந்தன் புகழ்சொல்லிப் பாடு – குகன்
கடிதில்குரு வடிவில்பெரு மயிலில்மிக விரைவில்வரக்
காண்பாய் கழல் பூண்பாய்!

- வ.சின்னப்பா
தனங்களப்பு.

## இன்றோடு தீர்த்திடுவாய்!

ஓமின் பொருள் கேட்டு
பிரம்மனைச் சிறையிலிட்டு
தந்தைக்குப் பொருளுரைத்து
தகப்பன் சாமியானவனே!

ஈழத்தமிழரினின்னல்களை
இன்றோடு தீர்த்திடுவாய்!
நல்லூரில் திருவிழாக்காணும்
நம்மருள் திருக்குமரா!

- மாருதி
ஆவரங்கால்.

## உருகாதார் யாருளர்?

முருகா நீ மயிலேறி
வரும் காட்சி தனைக்கண்டு
உருகாதார் யாருளர்
இந்தப் பூவுலகில்
மருகா நீ வேலேந்தி
அழகாக வருகையிலே
பெருகாதோ நம் பக்தி
பிறவிப் பயனடைய
அருகாக நாம் வந்து
அரோகரா என்றிடவே
சருகான நம் வாழ்வில்
பசுமை துளிர்விடுமே.

- அளவையூர் ஸ்ரீபுராதனி.

## புகழறிவார் யாரோ?

காவடிகள் தோள்மீது ஏந்துகிறார் ஒருபால்
கற்பூர தீபங்கள் காட்டுகிறார் ஒருபால்
பாவவினை தீர்ப்பதற்கு பிரதிட்டை ஒருபால்
பைந்தமிழில் தோத்திரங்கள் பாடுகிறார் ஒருபால்
நாவதனால் ஒலிக்கின்றார் அரோகரா ஒருபால்
நாதனடி நெஞ்சிருத்தித் தொழுகின்றார் ஒருபால்
பூவதனால் அர்ச்சனைகள் புரிகின்றார் ஒருபால்
பொற்பதியாம் நல்லூரின் புகழறியார் யாரோ?

- கவிஞர் வ.யோகானந்தசிவம்

**விவைல்ஸ் கல்வி நிலையம்**

சுன்னாகம்

தமிழ்

A/L - 2004

வினா - விடை வகுப்பு

ஆசிரியர்

சி.கணேசலிங்கம்

B.A(HONS) தமிழ்

(யாழ் மாவட்டத்தின் பிரபல ஆசிரியர்)

ஆரம்பம் : 29.08.2003

வெள்ளி பி.ப 4.00மணி

(21872)(11-16-31)


## யாழ். ரயில் நிலையப் பகுதியில்

# சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியவர்கள் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ். ரயில் நிலையப் பகுதியில் சநதேகத்திற்கிடமான முறையில் நடமாடிய பெண் உட்பட மூவர் அப்பகுதி விழிப்புக்குழுவினரால் பிடிக்கப்பட்டு கலாசாரத்தைப் பேணும் குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

அப்பகுதியில் மாலை ஆறுமணி முதல் இரவு எட்டுமணி வரை ஒரு பெண்ணும் இரு ஆண்களும் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியுள்ளார்கள்.

இதனை அவதானித்த அப்பகுதியில் இயங்கிவரும் விழிப்புக்குழுவினர் இவர்களை மடக்கிப் பிடித்துக் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைத்தனர்.

இவர்களை விசாரணை செய்த கலாசாரம் பேணும் இளைஞர்கள் அவர்களை எச்சரித்துவிட்டு விடுவித்துள்ளார்கள்.

(ஒ-12)

## அழைப்புக் கட்டளை

இல:16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் சந்தியாப்பிள்ளை அன்ரன் தவராஜா பெண் ஸ்ரனிஸ்லஸ் மகள் றெஜி வினிபிரட் 112/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

- வழக்காளி -

வழ.இல.மணநீக்கம்/393

எதிர்

சந்தியாப்பிள்ளை அன்ரன் தவராஜா
11, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.

- எதிராளி -

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி உமக்கும் தமக்குமிடையேயுள்ள விவாகத்தை ரத்துச்செய்வதற்காக இந்த நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத்தொடுத்துள்ளாராதலினால், இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2003ஆம் ஆண்டு புரட்பாதி மாதம் 18ஆம நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பவானி சற்குணராசா
வழக்காளியின் சட்டத்தரணி

குறிப்பு- விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதி மன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும்தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும் பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

ச.வன்னியசிங்கம்
பதில் பதிவாளர், மா.நி.யாழ்ப்பாணம்.
2003ஆம் ஆண்டு ஆவணி மாதம்
21ஆம் நாளாகிய இன்று

(21877)(11-16-31) *மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வார்ட்டுகளில் நெருக்கடி

தென்மராட்சி,ஓக.27

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுக்களில் தங்கி சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்துவருவதையடுத்து வார்ட்டுகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. வார்ட்டுக்களிலுள்ள அனைத்து கட்டில்களும் நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றன. விறாந்தைகளில் நோயாளர்கள் பலர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வார்ட்டுக்களில் நோயாளர்கள் நிறைந்துள்ளதால் இடமின்மை காரணமாக பல நோயாளர்கள் வீடுகளுக்கு திருப்பி, அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

வார்ட்டுக்களில் தங்கிசிகிச்சை பெறுவோரில் பெரும்பாலானோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-117)




# சிறந்ததோர் வாய்ப்பு

## நீங்கள் எதுவரை செல்ல விரும்புகிறீர்கள்?

**கீழ்காணும் நாடுகளில் பல்கலைக்கழகம்**
**அல்லது கல்லூரிகளில் கல்விபெற வாய்ப்பு**
**2004ஆம் ஆண்டுக்கான அனுமதி.**

- முதல் இரு ஆண்டுகள் ஐரோப்பிய சமூக நாடொன்றிலும் கடைசிவருடம் ஐக்கிய அமெரிக்கா/ஆஸ்திரேலியா நாடுகளிலும் நிறைவு பெறும்.
- முதல் இரு ஆண்டுகள் மலேசியாவிலும், கடைசி வருடம் ஆஸ்திரேலியா/ஐக்கிய இராச்சியம்/ஐக்கிய அமெரிக்கா நாடுகளிலும் நிறைவு பெறும்.

மற்றைய நாடுகள்: கனடா/நியூசிலாந்து/சிங்கப்பூர்/அயர்லாந்து/ஐப்பான (மொழி)

## கனடா/ஆஸ்திரேலியா/நியூசிலாந்து



ஆகிய நாடுகளில் குடியேற வாய்ப்பு
பட்டதாரி/டிப்ளோமாவுடன் கூடிய மூன்று வருட தொழில் அனுபவம்.
(ஆகக்குறைந்தது)

## நீங்கள் இப்போது தயாரா?

அப்படியானால் முதலில் உங்கள் பெயரைக் கீழ்க்காணும் விலாசத்தில் ஒரு மாதத்திற்குள் பதிவு செய்து கொள்ளுங்கள்

*யாழ்ப்பாணத்தில்* : திருமதி ஏ.துரைசிங்கம்,
இலக்கம். 529, பலாலி வீதி,
(பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்- 0777 322551

காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரையும்,
பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 05.30 மணிவரையும்.

கொழும்பில்: திரு. ரீ.ரீ. பிரகலாதன் (பிரபா)

நியூசிலன்ட் அக்கடமிக் சேர்விஸஸ் கொழும்பு (பிறைவேற்) லிமிட்டெட்,

யூனிட் 11, 2ஆம் மாடி, லக்கி பிளாஸா,
இலக்கம் 70, சென்ற் அன்ரனீஸ் றோட், கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம்: 0777 798149(HotLine), 074 – 714760
ஈமெயில்:saiprabal9@hotmail.com



# VACANCIES

## UNDP Transition Programme

*UNDP is working in areas of economic recovery, capacity building, post conflict participatory planning and peace & reconciliation activities. We have the following vacancy in our Jaffna field office:*

**National United Nations Volunteer (NUNV)**

- Main responsibility will be collecting & analysing data and preparing monthly reports.
- Applicants should have
  - A degree preferably in Agriculture, Management or Social Science.
  - Good communication & computer skills.
  - Strong motivation for humanitarian work.

Please send in your applications with a covering letter and CV (in specified format to be collected from the UNDP office / security) before the 8th of September.

UN promotes equal opportunities and encourages applications from women.

**UNDP,**
*121/4, Temple Road, Jaffna.*
*Tel: 2222277.*

(21885) (22-16-11)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி றொசெற் றொபின் சிபசீலன்

கோப்பாய் தெற்கு, கோப்பாய், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றொசெற் றொபின் சிபசீலன் அவர்கள் 18.08.2003 அன்று அகாலமரணமானார்.

அன்னார் றொபின் சிபசீலனின் மனைவியும் றொசின்ரன், றொசின்ரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகராஜா - ஞானமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் வைலற் றெபேக்கா, கமிலஸ், ஏஞ்சலின் றொசித்தா, சர்மிளா ஆகியோரின் அருமைச் சகோதரியும் பியால், அருள்வாணி, ஜெபநேசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் இமாசினியின் பாசமிகு பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.08.2003) வியாழக்கிழமை டென்மார்க்கில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய பொலீஸ் நிலைய ஒழுங்கை,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

தகவல்:
K.நாகராஜா (தந்தை)

(21884) (26-16-11)

## கந்தையா பாலசுந்தரம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுந்தரம் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் செல்லம்மாவின் (பிள்ளை) அன்புச் சகோதரரும் திருவருட்செல்வி, திருச்செந்தூர்செல்வி, கிருபராசா (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கருணாகரனின் அன்பு மாமனாரும் குணபிரசாந்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2003) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:*
கலைமகள் வீதி,
மயிலிட்டி, காங்கேசன்துறை.

*தற்காலிக முகவரி:*
இல. 80A/1, வியாசர் வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்:
பொ.பற்குணராசா (குணம்)
மைத்துனர்
சில்லாலை.

(21882) (26-16-11)

## வைரமுத்து காசிப்பிள்ளை

தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்.கொண்டலடி விநாயகர் கோயிலடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து காசிப்பிள்ளை 22.08.2003 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து வள்ளியம்மை தம்பதிகளின் அருமைப் புதல்வனும் நாகரட்ணம் (ராசனக்கா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரம் (பிரான்ஸ்) மற்றும் இந்திராணி (இந்தியா), குணசேகரம் (கணேஸ் - U.K.), ஞானராணி, சற்குணராணி, வசந்தராணி, பத்மராணி, காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் உதயராணி (இந்தியா), யோகராணி (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இரத்தினசிங்கம் (U.K.) ஆகியோரின் மைத்துனரும் பரம்சோதி (Australia), யோகமலர் (U.K.) ஆகியோரின் சகலனும் கமலாம்பிகை (பிரான்ஸ்), நகுலராசா (Canada), தயாநிதி (U.K.), முருகையா, காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் ஜெகதீஸ்வரன், குணலேந்திரன், காலஞ்சென்ற சங்கர் (India) மற்றும் ஏகம்பநாதன் (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகந்தன், கயந்தன் சங்கிதா (France), அருந்ததி, சர்மிளராணி (India), கணேஸ்கண்ணன் (U.K.) முரளிதரன் (India), ரம்யா, கௌதம் (U.K.), அனுயா, அகிலா, பரிஸகுமார், ஆஸா, தசாயினி, துஸ்யந்தன், தர்சிகா, கார்த்திகா, பத்மபுசன் (India), சரண்யா, திவ்யா(U.K.) ஆகியோரின் அன்புப் பேரனும் கௌசிகா (India) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2003) வியாழக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**532 (214), கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P. 077 6013624.**

தகவல்:
கா.குணசேகரம் மகன்
(கணேஸ் - U.K.)

(21875) (26)

# ஊழியர் வேலைநிறுத்தம் காரணமாக பல்கலை செயற்பாடுகள் ஸ்தம்பிதம்!

## துணைவேந்தர் மோகனதாஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.27

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்கங்கள் நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தின் காரணமாக யாழ் பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் முடங்கிப்போயுள்ளன என துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக துணைவேந்தர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நடைபெற்றுவரும் இந்தப் போராட்டம் விரைவில் முடிவுக்குவரவேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படல் வேண்டும். குறிப்பாக அவர்களின் சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படல் வேண்டும். இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பி.ஆர்.ஆர்.என்.மெண்டிஸ"க்கும் எடுத்துக் கூறியுள்ளேன்.

இந்த விடயம் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபிர் ஹாசிமும் ஆவலாக உள்ளார். கடந்த 3ஆம் திகதி துணைவேந்தர்களுக்கான கூட்டம் கொழும்பில் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

எவ்வளவு விரைவில் ஊழியர்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்குமோ அவ்வளவுக்கு பல்கலைக்கழகச் செயற்பாடுகளும் புத்துயிர்பெறும்.

தற்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டு விட்டன. விரிவுரைகளும் தற்பொழுது நடைபெறுவதில்லை. இதனையடுத்து, பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களையும் வீடுகளுக்குச் செல்லுமாறு கூறியுள்ளேன்.

தண்ணீர் மற்றும் மின்சார விநியோகம் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. எனினும் நாளடைவில் அப்பணியில் ஈடுபடும் ஊழியர்களும் போராட்டத்தில் குதித்தால் மாணவர்கள் விடுதியில் இருக்கமுடியாது.

இவற்றை கருத்திற்கொண்டு மாணவர்களுக்கு மேற்கண்டவாறு கூறியுள்ளேன்.

மின்சார விநியோகம் தடைப்பட்டால் ஆய்வுகூடங்களில் உள்ள குளிரூட்டப்பட வேண்டிய பொருள்களைப் பேணுவதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவையும் உள்ளது - என்றார் அவர். (எ-10)

# கருங்குளவிகளின் தாக்குதல் தென்மராட்சியில் அதிகரிப்பு

தென்மராட்சி,ஓக.27

தென்மராட்சி பிரதேசத்தில் கருங்குளவிகளினால் மக்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தினமும் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் பெய்த மழையையடுத்து பனை மரங்களிலிருந்து விழும் ஓலைகளுக்குள் இருக்கும் கருங்குளவிகளாலேயே பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர். கடந்த ஏழு நாள்களில் பத்துப் பேர் கருங்குளவிகளால் தாக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

கடந்த மூன்று வருடங்களாக தென்மராட்சியில் பெரும்பாலான பனை மரங்களில் ஓலைகள் வெட்டப்படாததால் காய்ந்துபோகும் ஓலைகளில் கருங்களவிகள் கூடு கட்டியுள்ளதாகவும் -

அண்மையில் பெய்த மழையின் பினனர் மரத்திலிருந்து விழும் ஓலைகளுக்குள்ளிருந்து கலையும் குளவிகள் பொதுமக்களை தாக்கி வருவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கருங்குளவிகளினால் தாக்கப்பட்ட நால்வர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பனம்பழம் பொறுக்கச் சென்ற மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கிருஷ்ணன் சரஸ்வதி (வயது55), விறகு எடுக்கச் சென்ற மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இராமநாதன் அஜிதா (வயது11), இராமநாதன் அபிராமி (வயது7), கெற்பேலி மத்தியைச் சேர்ந்த அருந்தவராசா விமலதாஸ் (வயது11) ஆகியோரே கருங்குளவிகளால் தாக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (ஒ-117)

### கொட்டாஞ்சேனையில் தமிழர்களிடம் வழங்கப்பட்ட

# பொலீஸ்பதிவு விண்ணப்பங்கள் பொலீஸாரால் மீளப் பெறப்பட்டன!

கொழும்பு,ஓக.27

கொட்டாஞ்சேனை பகுதியில் பொலீஸ் பதிவுக்காக தமிழர்களிடம் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பொலீஸார் நேற்றுமுன்தினம் மீளப் பெற்றுக்கொண்டனர்.

இருதினங்களுக்கு முன்னர் கொட்டாஞ்சேனைப் பகுதியில் வாழும் தமிழர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலீஸார். வீட்டில் தங்கியிருப்போர் பற்றிய விவரங்களை நிரப்பித் தரும்படி வீட்டு உரிமையாளர்களிடம் விண்ணப்பப் படிவங்களை வழங்கியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா மற்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து, பொலீஸ் தலைமையகம் விடுத்த உத்தரவுக்கு அமைய அவ்வாறு வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மீளப்பெறப்பட்டன.

பொலீஸார் மேற்கொள்ளும் தன்னிச்சையான - இவ்வாறான நடவடிக்கை பற்றி பொலீஸ் தலைமையகம் அறிந்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்த விடயம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார்.

பொலீஸ் - பொதுமக்கள் நல்லுறவு குழு உறுப்பினர்கள் சிலர் மேற்கொண்ட இந்தச் செயல், இனி இடம்பெறாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

### இனப்பிரச்சினைக்கு

# பேச்சுமூலம் தீர்வு என்பதுதான் இன்னமும் எமது நிலைப்பாடு

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது. பேச்சு மூலமே தீர்வுகாணவேண்டும். அதுவே எமது நிலைப்பாடாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில நேற்று முன்தினம் காலை பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்தி அஹ்திவாரி தலைமையில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பேசும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

பேச்சுகள் பகிரங்கமாக நடைபெறவேண்டும். அரசின் ஒரு தரப்பினர் புலிகளுடன் இரகசியமாகப் பேசுகின்றனர். இதனால், நிரந்தர சமாதானம் ஏற்படப்போவதில்லை.

அரசும், புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளனர். புலிகள் பல தடவைகள் யுத்தநிறுத்தத்தையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மீறியுள்ளனர். தங்களுக்கு எதிரான அரசியல்வாதிகளைப் புலிகள் படுகொலை செய்துவருகின்றனர். முஸ்லிம்கள் மீதான தாக்குதலும் கொலைகளும் தொடர்கின்றன. ஆயுதப் போராட்டத்துக்குத் தொடர்ந்து சிறுவர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

மனித உரிமை மீறல் சம்பவங்களிலும் புலிகள் ஈடுபடுகின்றனர். புலிகள் இரவு நேரங்களில் துப்பாக்கிகளுடன் நடமாடுகின்றனர்.

இவை குறித்து அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றார்கள். அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்ற போது, புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்தால் என்ன என்ற வாதத்தை இவர்கள் முன்வைக்கின்றார்கள்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுமூலம் தீர்வுகாண்பது என்ற நோக்கில் எனது அரசே முதன்முதலில் நோர்வேயின் அனுசரணையுடன் முயற்சிகளை ஆரம்பித்தது. இந்த அரசும் அதைத்தான் முன்னெடுத்துச் செல்கின்றது. ஆனால், பேச்சுகள் பகிரங்கமாக நடைபெறவேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி அங்கு கூறினார். (ஒ)

# புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தை அரசாங்கம் உடனடியாக வழங்கவேண்டும்

## புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் வேண்டுகோள்

"இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி அரசியல் முறையே சரியானதென பலவருடங்களாக நாம் வலியுறுத்தி வந்தோம். ஆனால், பதவியிலிருந்த எந்தவோர் அரசும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பொழுது இடைக்கால நிர்வாகம் பற்றி பேசப்படுகிறது. அத்தகைய நிர்வாகமொன்றைத் தமிழ்மக்களின் நலன் கருதி அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். இனவாதிகளின் கூச்சலுக்கு அரசு பணிந்துவிடக்கூடாது.

கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'இடைக்கால நிர்வாகத்தில் சமாதானமும், இடதுசாரிகளின் பாதையும்' என்ற கருத்தரங்கில் உரையாற்றிய புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

புதிய இடதுசாரி முன்னணியின் கொழும்பு வடக்கு அமைப்பாளர் எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் போராட்டங்கள் சாத்வீக வழியில் அமைந்திருந்தன. அவை வெற்றியளிக்கவில்லை. அதனால்தான் தமிழ் இளைஞர்கள் கடந்த இருபதாண்டு காலமாக ஆயுதமேந்திப் போராடினர். இப்போராட்டத்தை அரசால் வெற்றிகொள்ள முடியவில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளைத் தட்டிப் பறித்துக்கொண்டு நாட்டில் அபிவிருத்தியைக் கண்டுவிடமுடியாது. யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்துவதால் நாடு நன்மையடையப்போவதில்லை. இதனைப் பதவியிலிருந்த அரசுகள் உணரத்தவறிவிட்டன. இதனால், நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.

பாரிய கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏகாதிபத்தியவாதிகளுக்கு இந்த நாட்டைக் குத்தகைக்குக் கொடுக்க அரசு முன்வரக்கூடாது.

ரணிலை நம்பி பிரபாகரன் யுத்தத்தை நிறுத்தி சமாதானம் பேசுவதில் ஆர்வம் காட்டுகிறார். அதனை நடைமுறைப்படுத்துவதற்குப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தை அரசு உடன் வழங்கி செயற்படுத்த வேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ம)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.27

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மேற்கொள்ளவுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தினால் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களில் பலர் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டத்தையும் ஏனைய தகைமைகளையும் பெற்றுள்ளனர். இவ்வாறு இருந்தும் கூட கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாளொன்றுக்கு 80 ரூபா சம்பளத்தைப் பெற்று நிரந்தர ஆசிரியர்கள் செய்கின்ற சேவைகளையும் செய்து வேலைப்பளுவை அவர்களும் சுமந்து கொண்டிருப்பது மிகப் பெரிய குறைபாடாகும்.

நாட்டில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களில் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்றோர், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தோர், ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தியடைந்தோர், திறமைச் சித்தியடைந்தோர், ஆங்கில இலக்கிய பாடத்தில் சித்தியடைந்தோர் ஆகியோரை உடன் நிரந்தரமாக்கவேண்டும் என்று கல்வி அமைச்சுக்குப் பலத்த அழுத்தத்தைக் கொடுக்கின்றோம்.

அத்துடன், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் போராட்டத்துக்கு எமது ஆதரவையும் அவர்களது போராட்டம் வெல்ல எமது ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம-10)

## பாடசாலைக்கு அன்பளிப்பு

வலிகாமம்,ஓக.27

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்களின் பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடியவாறு ஒலிபெருக்கி சாதனங்கள் பாடசாலையின் பழைய மாணவா குடும்பம் ஒன்றினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் பழைய மாணவரான என்.நல்லையா - பவளராணி குடும்பத்தினரால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய ஒலிபெருக்கிச் சாதனங்கள் பாடசாலை அதிபர் க.செல்வகுமாரனிடம நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளன. (ம-152)




கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தினால் தரம் 6 மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவி சி.கிருபாலினியுடன் கழக உறுப்பினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (ம-10)

# தமிழ்ச்செல்வனின் கருத்துக்கு 4 கட்சிகளின் தலைவர்கள் மறுப்பு

தமிழ்பேசும் மக்களின் மத்தியில் செயற்படும் அரசியல் கட்சிகள் குறித்தும், நாளாந்த வாழ்வில் இயல்புநிலை தோன்றாமை குறித்தும் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.ஸி. தமிழோசைக்குத் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் கண்டனத்திற்குரியவையாகும்.

- இவ்வாறு ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எவ்., ஈரோஸ் ஆகிய கட்சிகள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இநதிய - இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொண்டு அரசியல் கடசிகளாகச் செயற்பட்டுவரும் அனைவரும் ஐக்கிய இலங்கை கட்டமைப்பிற்குள் சமஷ்டி அமைப்பை நோக்கிய அதிகாரப் பகிர்வை நிலைநாட்டுவதற்காகவே பாடுபட்டு வருகின்றோம்.

நோர்வே தலைவர் ஒஸ்லோவில் இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்களின் போதும் புலிகள் இதனையே ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எனவே, தேர்தல்கள் மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற ஏனைய அரசியல் கட்சிகளை, தமிழின விரோதிகளாகச் சுட்டிக்காட்டுவது பொருத்தமற்றதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சைக்கிளோட்ட போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.27

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தி னால் யாழ். மாவட்ட கிளையின் 1ஆம் வருட நிறைவையொட்டி மாணவர் களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு மானிப் பாய் வீதியிலுள்ள ஜனசக்தி காப் புறுதி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.மாவட்ட அஞ்சலகத்துக்கு சிற்றூழியர்களுக்கான பதில் ஆள் களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது. இந்த விண்ணப்ப முடிவு திகதி கடந்த 27ஆம் திகதியுடன் முடிவடைந் ததாக முன்னதாக அறிவிக்கப்பட்டி ருந்தது.

## தென்மராட்சி விவசாயிகளுக்கு அ.அட்டைகள்

தென்மராட்சி,ஓக.27

தென்மராட்சி தெற்குப் பிரதே சத்தில் காலபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட வயல்களில் செய்கை பண்ணுவோருக்கான விவ சாய அடையாள அட்டை படை அதி காரி முன்னிலையில் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப் பட்டு வருவதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இப்பகுதியில் நெற்செய்கை மேற் கொள்ள இதுவரை 330 பேர் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 90 பேர் விவசாய அடையாள அட்டை பெற் றுள்ளனர்.

அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் **2x2** அளவுடைய புகைப்படங்களை சமர்ப் பித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கமநல சேவை கள் நிலைய பெரும்பாக உத்தி யோகத்தர் எஸ்.தவராசா அறிவித்துள் ளார். (ம-117)

## டிறிபேர்க் கல்லூரியில் கண்ணி அகற்றும் பணிகள் துரிதம்

தென்மராட்சி. ஓக.27

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கண்ணிவெடி அகற்றும் பணி துரித கதியில் இடம்பெற்று வருகின்றது.

கல்லூரி வளவில் மிதிவெடி, கண்ணி வெடிகளின் அபாயம் காரணமாக ஒரு அடி ஆழத்திற்கு மண் தோண்டி எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஹலோ ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் வாகனங்கள் மண்ணை அகற்றி வருகின்றன.

இக்கல்லூரியில் அண்மையில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட தொண்டர்கள் வெடிக்கக் கூடிய நிலையில் புதைத்து வைக் கப்பட்டிருந்த கிரனேற்றுக்களை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்த னர்.

இக்கல்லூரியின் ஒரு பகுதியில் கடந்த ஏழு வருடங்களாக படை யினர் நிலைகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-117)

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.27

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று முதல் கழக மைதானத்தில் மின்னொளியில் நடை பெறவுள்ளது. இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம்:

★ இரவு 7.00மணி - சிறுப்பிட்டி ஜன சக்தி வி.க.அணி எதிர் காங்கேசன் துறை ஐக்கிய வி.க.பி. அணி.

★ மட்டுவில் வளர்மதி வி.க. எதிர் புத்தூர் கலைமதி வி.க. (ம-5-10)


**கடை வாடகைக்கு**

யாழ். காங்கேசன்துறை வீதி,
நாவலர் வீதிச் சந்தியில்
(25'x12')-3 Phase -
மின்சார வசதியோடு கூடிய
கடை வாடகைக்கு உண்டு.


*தொடர்பு :*
இல.555, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(21890)(31-12-18)



**பாராட்டும் வாழ்த்தும்**

**கிங் பரட்ஸ்**



வவுனியா, யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கிங் பரட்ஸ் எலக்ரோனிக் விற்பனை நிலையங்கள் இலங்கையின் முதற்தர விற்பனை நிறுவனங்களாக சிங்கப்பூர் **AKIRA** நிறுவனத்தினரால் நியமிக்கப்பட்டுள்ளமைக்காக எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள் கிறோம்.

*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.* (C29798) (32-31-12-18)

டாக்டர் க.தங்கராசா (பரம்)
குடும்பத்தினர்.


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து இராசரத்தினம்

அச்செழு, போயிற்றியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராசரத்தினம் அவர்கள் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற போயிற்றி செல்லத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகம்மாவின் அன்புத் தம்பியும் கண்மணியின் பாசமிகு கணவரும் சரஸ்வதி, தனலக்ஷமி (கனடா), பேரின்பநாயகம், ஏகாம்பரநாதன் (கனடா), சிவநாதன் (ஜேர்மனி), ஜெயந்திமாலா, சசிகலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசரத்தினம், துரைராஜா (கனடா), ஆனந்தராஜா, தங்கராஜா (கனடா), பத்மராணி, ரஜனி (கனடா), பத்மலோஜினி (ஜேர்மனி), காலஞ்சென்ற நல்லருலானந்தம், பூபாலசிங்கம், பத்மநாதன் மங்கையற்கரசி, பூபதி, பாலச்சந்திரன், அரியநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவலிங்கம், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் கமலநாதன், சத்தியேஸ்வரி, ஏகாம்பரதேவி, பரஞ்சோதி, சாந்தினி தேவி, சோமசுந்தரம், மலர்சோதி, நஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிரிஜா, பத்மராஜா, பிருந்தா, தர்சினி, தாரணி, தஜீ வன், வேணி, தனுசன், மாதுரி, மிதுலா, மிதுனன் ஆகியோரின் பாச மிகு பேரனும் ஸாணுகா, ரஷிக்கா, நிவிதா, நவீன், அட்சயா, அபிஷை னன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2003) வியாழக் கிழமை பிற்பகல் 12.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு போயிற்றி மயானத்துக்கு அக்கினி சங்கமத்துக் காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்செழு,*
*நீர்வேலி.*
*T.P : 077-6055134.* (21889)(31-12-18)

தகவல்:
இ.கண்மணி (மனைவி)
இ.பேரின்பநாயகம் (மகன்).


**வாழ்வின் வசந்தத்தை அனுபவியுங்கள்...**

அழகும், ஆரோக்கியமும், நிறைந்திருக்கும்
இல்லங்களுக்கு...
இதோ!! றோயல் சனிடேரிவெயார்
ஆரோக்கிய மட்பாண்டங்கள்

பல்வேறு வர்ணங்களில் அனைவரையும்
வியக்க வைக்கக் கூடிய முறையில் நேர்த்தியுடன்,
சர்வதேச தொழில் நுட்பம் கொண்டு
வடிவமைக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள்.

பக்டீரியா எதிர்ப்புக் கொண்ட
மேற்பரப்புடன்,
சுவர்களுக்குப் பொருத்தமாகவும்,
கண்ணைப் பறிக்கும்
வண்ணங்களுடனும்,
தனித்தனி அளவுகளிலும்
தயாரிக்கப்படுகின்றது.

சர்வதேச முறையில்
தயாரிக்கப்பட்டது
@
நம்பமுடியாத விலை

**எமது தலைசிறந்த உற்பத்திப் பொருட்களை**
**இலங்கை முழுவதிலும் விற்பனை**
**செய்ய முகவர்கள் தேவை.**

* நவீன மட்பாண்டத் தொழில்நுட்ப முறை

* பக்டீரியா தாக்கத்தை எதிர்க்கக் கூடிய
பளபளப்பான மேற்பரப்பு கொண்டது.



RSL

**Royal Sanitaryware (Pvt) Ltd.**
No. 21, Narahenpita Road, Nawala.
Tel: 074-410294, 074-410299, 071-2344565
Fax: 01 - 2805118
E-mail:rpmexelentiles@wow.lk

**சிக்கலும் இல்லை! உடல் நலக்கேடும் இல்லை!!**

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

எம் ஆசான் **வண.S.P.ஜெயசிங்கம் போதகர்** அவர்களே!

எம் கல்வியின் விடி விளக்காய் வந்த ஒளித்தீபமும் நீர்
எம் வாழ்வில் நல்வழி காட்டிய - நற்திருப்பணியாளனும் நீர்
நீர் நடந்த பாதையில் நாம் நடக்க நல்வழி காட்டினீர்.

எம் திருப்பணியாளரின் பிரிவினால் துயருறும் போதகரினதும் அம்மா வினதும் குடும்பங்களுடன் நாமும் இணைந்து எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுன்னாகம். (21878) (19-24-11-15) - இறையியல் கல்லூரி குடும்பம்.



# தேவை

## வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கேதீச்சரத் திருக்கோயிலில்

பணியாற்றுவதற்குத் தகுதியுடைய சிவாச்சாரியர்கள், மடைப் பள்ளி பரிசாரக ஐயர்கள் தேவைப்படுகின்றனர். பணியில் சேர விருப்பமுடை யவர்கள் தகைமையுடன் நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடித மூலமோ கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

1. திருக்கேதீச்சரத் திருக்கோயில், திருக்கேதீச்சரம்.
2. இல.3, இராமகிருஷ்ண அவென்யூ, கொழும்பு - 06.

தொலைபேசி எண்: 023 2233003
01 2360316
2586042

திருக்கேதீச்சரம். (21870) (26-24-11-15) - துணைச் செயலர்.


## போட்டிப் பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூக சேவை உத்தியோ கத்தர், கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தர், சனசமூக அபிவிருதி உத் தியோகத்தர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் 14ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ளதாக மாகா ணப் பொதுச் சேவை ஆணைக்குழு வின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருந்து பிற்போடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ம-10)

## கூட்டம்

வடமராட்சி கிழக்கு மருதங் கேணி உதவி அரச அதிபர் பிரிவுக் குட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் வி.பி.வேலா யுதபிள்ளை தலைமையில் நடைபெற வுள்ள இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தமிழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் கள் பலரும் கலந்துகொள்வர்.

இப்பிரதேசத்திற்குட்பட்ட சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகி களையும் தவறாது கலந்துகொள்ளு மாறு மருதங்கேணி விளையாட்டு அலு வலா பி.முகுந்தன் கேட்டுள்ளார்.(ம-5)


உ
குருமயம்

# புதுக்கடைத் திறப்புவிழா

# கைதடி வர்த்தக நிலையம்
# Kaithady Trade Center

ஞானம் கட்டடம், கைதடிச் சந்தி.

காலம்: நாளை (28.08.2003) வியாழக்கிழமை
காலை 9.00 மணி (புதியநேரம்)

**மங்கல விளக்கேற்றல்**

1. திரு.சிதம்பரநடராசா
   தலைவர், மருதடி விநாயகர் தேவஸ்தானம்
2. திரு.சு.சிவகுமார் அதிபர் "சந்தர்சன்" மானிப்பாய்
3. வர்த்தக நிலையைத் தொடக்குநர்
   திரு.கு.கங்கைவேணியன் J.P.
4. வியாபாரத்தை ஆரம்பிப்போர்:
   திரு.த.புஸ்பராசா
5. ஆசி உரைகள்:

எம்மிடம்

* காஸ் சிலிண்டர், * அல்கத்தியன் பைப்புகள்,
காஸ் அடுப்புகள் உபகரணங்கள்
* மின்சார உபகரணங்கள்
* கட்டடப் பொருள்கள், சிமெந்து, பலகை வகை, கம்பிகள்
* விவசாய உற்பத்திப் பொருள்கள்
* C.I.C. மிருக உணவு வகைகள் * உரவகை, கிருமிநாசனி
* C.I.C. கோழிக்குஞ்சுகள் * ஆனந்த - சியாக்காய் பவுடர்,
மிளகாய்த்தூள், நல்லெண்ணெய், தேயிலை
* பிளாஸ்ரிக் கதிரைகள் * சைக்கிள் உதிரிப்பாகங்கள்

☞ அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன்....
**S.N.J.** யாழ். - கொழும்பு சொகுசு பஸ் சேவையும்
உள்ளூர் - வெளியூர் தொலைபேசி சேவையும் வழங்கப்படுகிறது.
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
**- KAITHADY TRADE CENTER -**

நிர்வாக இயக்குநர்,
திரு.இ.குழந்தைவடிவேலு J.P.



உ
அம்பாள் துணை



## வடவரணி
# சிமிள் ஸ்ரீகண்ணகை அம்பாள் தேவஸ்தான சம்புரோட்சண மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2003

எதிர்வரும் சுபானு வருடம் ஆவணிமாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 6.00மணி 41நிமிடம் வரையில் வரும் பூர்வபக்க பஞ்சமி திதியும் சுவாதி நட்சத்திரமும், சிங்க இலக்கினமும், சந்திர ஓசையும் உடனமைந்த சாத்விக குணவேளையில் விநாயகப் பெருமானுக்கும், கண்ணகை அம்பாளுக்கும், ஏனைய பரிவாரத் தெய்வங்களான சுப்பிரமணியர், வயிரவர் ஆகிய தெய்வங்களுக்கும் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

**ஆவணி மாதம் 12ஆம் திகதி** வெள்ளிக்கிழமை (29.08.2003) நண்பகல் 12மணி 5நிமிடத்தின் பின் அனுக்ஞை கர்மாரம்பம் மகாகணபதி ஓமம், மாலை கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, கோவாசம், தீபஸ்தாபனம் பின்னிரவு (30.08.2003) 4.30 மணியளவில் கும்பங்கள் யாகசாலைப் பிரவேசம், விக்னேஸ்வர பூசை, தொடர்ந்து யாகபூசை நடைபெறும்.

**ஆவணிமாதம் 13ஆம் திகதி** சனிக்கிழமை மத்தியானம் நவக்கிரக ஓமம், கிரக தோஷங்கள் உள்ள அடியார்கள் நவக்கிரக பூசையில் பங்குபற்றி தமது தோஷங்களை நிவர்த்தி செய்யலாம்.
மாலை - யாகபூசை.

**ஆவணி மாதம் 14ஆம் திகதி** ஞாயிறு அதிகாலை தொடக்கம் யாகபூசை, ஓமங்கள், தூபிஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், மாலை - யாக பூசை, திரவியம் ஓமம்
14ஆம் திகதி பின்னிரவு 3.00 மணி தொடக்கம் பிம்பசுத்தி, ஸ்பாசாகுதி அதனைத் தொடர்ந்து மகாபூரணாகுதி தூபி அபிடேகம், கும்ப உத்தாபனம், விதிவலம் வந்து காலை சிங்க இலக்கின சுபமுகூர்த்தத்தில் சம்புரோட்சண மகாகும்பாபிஷேகம் நடைபெறும். மதுபர்க்க நிவேதனம், தெசதரிசனம் 9.30 மணியளவில் மஹா அபிடேகம், விசேடபூசை, சுவாமி வீதி, பிரதட்சனை, முன்மண்டபத்தில் அம்பாள் அமர்ந் ... சாபசார பூசை, விசேட அர்ச்சனைகள் நடைபெறும். மாலை 4.30 மணியளவில் பொன்னூஞ்சல்.

குரு ஆசீர்வாதம், சிறப்புரைகள், நன்றி உரைகள் தொடர்ந ... ம்.
எனவே அம்பாள் அடியார்கள் கும்பாபிடேகத்தில் பங்குபற்றி தேவியின் அருளைப் ... உய்வ ... என
வேண்டுகிறோம். அபிடேகத்திற்கு இளநீர் தருவது விரும்பத்தக்கது.


பிரதமகுரு: சிவஸ்ரீ க. சுப்பிரமணியக்குருக்கள்
*உதவிக் குருக்கள்:* சிவஸ்ரீ பொ. ஐயாத்துரைக்குருக்கள்
சிவஸ்ரீ செ.கயிலாசநாதக்குருக்கள்
சிவஸ்ரீ செ.விஸ்வநாதக்குருக்கள்
*நித்திய பூசகர்:* சிவஸ்ரீ பா. ருத்திரபால ஐயா

(21857) (26-24-11-15)

45 நாளும் மண்டலாபிஷேகம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவரவர் குடும்ப ஷேமத்திற்கு மண்டலாபிஷேகத்தில் பங்குபற்றலாம். அதற்கான உத்தேச செலவு மேளமின்றி ரூபா 3000 /=.

தங்கள் ஆதரவை வேண்டி நிற்கும்: **ஆலய பரிபாலன சபையினர்.**





*அகில இலங்கை சமாதான நீதிவான் பதவிபெற்றவரும்*
*சமய, சமூகப் பணிகளுக்கு முன்னின்று உழைப்பருமாகிய*
**திருவாளர் கு.கங்கைவேணியன் J.P.**
*அவர்களின்*
*பணியை ஊக்குவிக்கும் முகமாக எடுக்கப்படும்*

# பாராட்டு விழா

தலைவர்:- திரு.இ.குழந்தைவடிவேலு J.P.
தலைவர் ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்
இடம்:- ஞானம் கட்டட மண்டபம், கைதடிச் சந்தி, கைதடி
காலம்:- 28.08.2003 வியாழக்கிழமை காலை 10.00 மணி
வரவேற்புரை:- திரு.சு.செல்வராசா *கிராம உத்தியோகத்தர்*
ஆசி உரை:- சிவஸ்ரீ நா.ஹரிந்திரக் குருக்கள்
*சித்தி விநாயகர் ஆலயம், நாவற்குழி*

**விழா நாயகர் கௌரவிப்பு**

பாராட்டுரை:- திரு.சி.சுப்பிரமணியம்
*செயலாளர், வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், கைதடி*
திரு.S.C. இராசையா
*பொருளாளர், கயிற்றசிட்டி முருகன் தேவஸ்தானம்*
திரு.S.S. இராசையா
*தலைவர், கயிற்றசிட்டி முருகன் தேவஸ்தானம்*
திரு.ச.வீரசிங்கம்
*செயலாளர், இலுங்கித் தோட்டம், முருகன் தேவஸ்தானம்*
திரு.நா.திருச்செந்தில்நாதன்
*உபசெயலாளர், ஸ்ரீ சச்சிதானந்தன் ஆசிரமம்*
திரு.ச.தங்கராசா (நவபுரம்)
*(பல ஆலய நிர்வாக சபை உறுப்பினர்)*
திரு.கே.எஸ்.பூபாலசிங்கம்
*செயலாளர் (வாலாம்பிகை அம்மன் தேவஸ்தானம்)*

சுதாநாயன் பதில் உரை
நன்றி உரை:- திரு.சு.ஜெயவிக்னேஸ்வரன்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
திரு.இ.குழந்தைவடிவேலு J.P.

## அறிஞர்களின் பேருரைகள்

தலைவர்:- திரு.கு.கங்கைவேணியன் J.P.
இடம்:- ஞானம் கட்டட மண்டபம்
விடயம்:- **மூலிகைகளின் அரசன் ரிஷி காளான்**

1. டாக்டர் க.ஈஸ்வரி
   *(ரிஷி காளான் முக்கிய விநியோகஸ்தர்)*
2. திரு.K.சாந்தாகிருஷ்ணன்
   *(ரிஷி காளான் முன்னணி நட்சத்திர அங்கத்தவர்)*
3. திரு.K.பாலசிங்கம் *(ரிஷி காளான் நட்சத்திர அங்கத்தவர்)*
4. திரு.கு.ஸ்ரீசஷ்டிகாந்தா *(படவரைஞர் - கைதடி)*

*(ரிஷி காளான் அங்கத்தவர், விற்பனையாளர் T.P. 077-6080930)*

கிராமிய பொருளாதார மேம்பாட்டு அறிமுக உரை, கோழி வளர்ப்பு
திரு.S.சரத்குமார்
*C.I.C. மிருக உணவு விற்பனை பிரதிநிதி*
மிருக வைத்திய கலாநிதி ச.மகேந்திரராஜா *சாவகச்சேரி*
திரு.C.K.மகேந்திரன்
*கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், கைதடி*
விறகுப் பாவனையும் காஸ் அடுப்பும்
விளக்கமளிப்பவர்: திரு.ப.சிவகுமார் அவர்கள்
*(காஸ் சிலிண்டர் அடுப்பு முகவர்)*

**அல்பா மிக்சர்**

மிக்சர் விற்பனை ஆரம்பித்து வைப்பவர்
**திரு.P.பாலமுருகன் அவர்கள்**
*(அதிபர் அல்பா மிக்சர் கம்பனி)*
10 வர்த்தக பெருமக்களுக்கு 10 மிக்சர் பெட்டி அன்பளிப்பாக வழங்கப்படும்.
கோழி வளர்ப்பு திட்டத்தில் இணைய விரும்புபவர்களில் 10 பேருக்கு அன்பளிப்பாக குஞ்சுகள் வழங்கப்படும்.
இவ்வைபவத்தில் அனைவரும் பங்குகொண்டு வழங்கப்படும் ஆலோசனைகள், அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

T.P.: 0777 722914 திரு.இ.குழந்தைவடிவேலு J.P.
(சி-29790) (24-11-15) நிர்வாக இயக்குநர்.



உ
விநாயகர் துணை

# விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் ஆவணி மாதம் 11ஆம் நாள் நாளை (28.08.2003) வியாழக்கிழமை பகல் 10.01 மணிமுதல் பகல் 10.30 மணிவரை வரும் அமிர்த சித்தயோகமும் துலா லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்,

சிவஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பௌத்திரனும்
(இந்தியா) சிவஸ்ரீ சதாசிவக் குருக்களின்
தௌஹித்திரனும் (மாவிட்டபுரம்)
சிவஸ்ரீ சுந்தரக் குருக்கள் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரனுமாகிய
சிரஞ்சீவி **மாணிக்கராஜ சர்மாவுக்கு**
*(ராஜ் வீடியோ உரிமையாளர், தேவஸ்தான அர்ச்சகர் - கண்டி)*

சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்களின் பௌத்திரியும்
சிவஸ்ரீ நடராஜ சர்மாவின் தௌஹித்திரியும்
சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் தம்பதிகளின்
ஜேஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி **அனந்தலெட்சுமியை**
(வாணி)
**B.A.(Hons)**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்ரஹகணம் மணமகள் இல்லத்தில் நடைபெற எல்லாம்வல்ல விநாயகப் பெருமானதும், ஸ்ரீ முத்துமாரியம்மனினதும் அனுக்கிரகத்துடனும் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளினதும் ஆசியுடனும், பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதனால், எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சமாவர்த்தனம்: காலை 6.15 - 7.15 மணிவரை (நல்லூர் சிவன்கோயில் மண்டபம்)**

தங்கள் நல்வரவை நாடும்:

சிவஸ்ரீ சுந்தரக் குருக்கள் -
ஸ்ரீமதி பர்வதாம்பாள் தம்பதிகள்
*255/07, 12,* குறுக்குத் தெரு, மன்னார் றோட்,
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலடி, புத்தளம்.

(இருவீட்டார் அழைப்பு)
(21871) (24-11-15)

சிவஸ்ரீ.சோ.நடராஜக் குருக்கள் -
ஸ்ரீமதி விஜயகுமாரி தம்பதிகள்
சட்டநாதர் றோட், புதிய செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர் 1Kg 160/- மொத்த மாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு. தொடர்பு: 1. மான்ஸ் பாட சாலை வீதி, டச்சுறோட், உடுவில் 2. பொன்னாலை வீதி, விதானையார் வளவு, மானிப்பாய். (21611)

## வீடு காணி விற்பனைக்கு

கண்டி வீதியில், கைதடி நுணா விலில் 23 பரப்புக் காணியில் சேத மடைந்த வீட்டுடன் முன்பக்கம் கண்டி வீதியும் மூன்று பக்கமும் ஒழுங்கை யால் வரையறுக்கப்பட்டது விற்பனைக்கு உண்டு. (பகுதியாகவும் விற்பனை செய் யப்படும்) தொடர்பு: வே.விக்னேஸ்வரன Thinakkural Rest No. 45, Chetty Street Lane, Nallur. T.P. 222 6476(21873)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Broiler குஞ்சுகள் 01.09.2003 பிற்பகலில் விநியோகிக்கப் படும் முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகே சர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை யடி நல்லூர். (சி-29733)

## தவறிவிட்டது

கைத்தொலைபேசி ஒன்று கொக் குவிலில் தவறிவிட்டது. (0776005593) கண்டெடுத்தவர்கள் செ.சக்திவேல் இல30/2, சைவப் பாடசாலை ஒழுங்கை, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங் கப்படும். (21881)

கைதடி வடக்கைச் சேர்ந்த கந் தையா பரமேஸ்வரி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் தொலைத் தொடர்புகள் குறிப்படங்கிய புத்தகமும், தேசிய அடையாள அட் டைக்கு விண்ணப்பித்த பற்றுச்சீட்டும அடங்கிய கைப்பையொன்று யாழ்ப் பாணத்துக்கும் சிறுப்பிட்டிக்கும இடை யில் 25-08-2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விவாகப் பதிவாளர், கைதடி வடக்கு, கைதடி என்ற முகவரி யில் ஒப்படைததுதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (21883)

தெல்லிப்பழையைச் சேர்ந்த தில் லையன் குலசிங்கம் என்பவருடைய தே.அ.அ.(702031990V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் குருக்கள் ஒழுங்கை, குப்பிளான் வடக்கு, குப்பிளான் எனும் முகவரி யில் ஒப்படைத்துதவவும். (21851)

அராலி தெற்கு வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (452241234V), விசேட அடையாள அட்டை என்பன யாழ்.பஸ்நிலையப் பகுதியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை மேற்பார்வை யாளர் காரியாலயத்தில் ஒப்படைத் துதவவும். (21849)

## வீடு விற்பனைக்கு

மாநகரசபை எல்லைக்குள் கொழும்புத்துறை பிரதான வீதியில் 51/2 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்ப னைக்குண்டு.

தொடர்பு:-
திருமதி ம.தியாகலிங்கம்
90, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்
தேவி தொலைத் தொடர்பகத்துக்கு முன்பாக
021 222 3318,
021 222 6020.
(21694)

## விற்பலனக்கு

உரும்பிராய் வடக்கு, கற்பகப் பிள்ளையார் வீதி, சந்திரன் கடைக்கு அருகல் பயன்தரு மரங்கள் உள்ள 4பரப்புக் காணியில் 3அறைகள், 2கோல், சமையலறை, ஸ்ரோர் றூம் ஆகியவை கொண்ட வடக்கு நோக் கிய கிழக்குவாசல் விசாலமான வீடு வடக்கு, தெற்கு இருபக்கமும் ஒழுங்கை யும் தாய்க்காணியில் உள்ள கிணறதில் பங்கும், வழிவாய்க்கால் உரித்துடன் அதிகம் கூடிய விலை கேட்பவருக்கு முன்னுரிமை அடிப்படையில் உடன் விற்ப னைக்குண்டு.

தொடர்பு:
T.காசிலிங்கம்
முதலாம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு.
(21863)

## திருமண சேவை

1959, அச்சுவினி, படித்த மணப் பெண்ணுக்கு அரச/தனியார் துறை மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். உள்நாட்டு, வெளிநாட்டு மணமக் களின் தேர்வுக்கு நாடுங்கள்: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (21835)

எம்மிடம் வெளிநாட்டு ஸ்பொன்சா மணமக்களின் குறிப்புக்களும் உள்நாட்டு ஆசிரியா, எழுதுவினைஞர், வர்த்தகர்கள், டாக்டர்கள், எச்சினி யர்கள், எக்கவுண்டர்கள் மணமக் களின் குறிப்புக்களும் கத்தோலிக் கரினது தகவல்களும் எம்மிடம் உண்டு. I.கல்யாண மாலை திரு மண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். கொழும்பில் கல்யாணமாலை T.P. 338162, Fax 338161 (21858)

## போட்டிப்பரீட்சை(SSO)

அபிவிருத்தி உத்தியோகத்தருக் கான போட்டிப் பரீட்சைக்குரிய பொது அறிவும் நுண்ணறிவும் என்னும் நூல வெளிவந்துள்ளது. யாழ்.பிரபல புத்தக சாலைகளிலும் கொழும்பிலும் பெற்றுக கொள்ளலாம். விலை ரூபா 120. பிரபல ஆசிரியர் கே.கமலதாசன். (21704)

## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14", 16" ஆகிய னவும் மின்சார ரில்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர் கள், வெல்டிங் பிளான்ற், இவற்றிற் கான உதிரிப்பாகங்களும் வேறு வகை மின்சார சாதனங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
கி.சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சி-29776) (21-15-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பள்ளி ஆசிரியை

**திருமதி மதுமதி வசந்தகுமார்**

அவர்கள் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் (S.L.A.S.) சித்திபெற்று தெரிவு செய்யப்பட்டமையையிட்டு அவர் மேலும் பல சிறப்புகள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.* பாடசாலை நலன்புரிச் சங்கம்.
(சி-29795) (19-21-16)

## த ஹேலோ டிரஸ்ட்

தற்போதுள்ள வேலைவாய்ப்பு

### வளாக முகாமையாளர்
(Compound Manager)

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

- கணனி அறிவு (Microsoft Word and Excel)
- வாகன முகாமை தொடர்பான போதிய அனுபவம் (Fleet Management)
- களஞ்சியப்படுத்தலும் கணக்கியலும் தொடர்பான அனுபவம்
- ஆங்கிலம் பேசும் திறன்
- ஆங்கிலம் எழுதும் திறன் வரவேற்கத்தக்கது
- விண்ணப்பதாரி 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும.

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்யும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

உதவி அலுவலக முகாமையாளர்,
**த ஹேலோ டிரஸ்ட்,**
655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

*ஊதியமும் இப்பதவி சம்பந்தமான நிபந்தனைகளும் தனிப்பட்ட ரீதியில் கலந்தாலோசிக்கப்படும்.*

(21880) (21-19-16)

## த ஹேலோ டிரஸ்ட்

தற்போதுள்ள வேலைவாய்ப்பு

### பகுதி நேர மொழிபெயர்ப்பாளர்

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்

- சிங்கள மொழி எழுதுவதற்கான விசேட தகைமை
- ஆங்கில மொழியில் எழுதுவதற்கும் பேசுவதற்குமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வேலைவாய்ப்பானது பகுதி நேர வேலை அடிப்படையிலும் அத்துடன் ஹேலோ டிரஸ்டால் பேணப்படும் இலங்கை இராணுவத் தின் கண்ணிவெடி பிரதேச அறிக்கையை மொழிபெயர்ப்பதற்கு மாகும்.

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்யும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

உதவி அலுவலக முகாமையாளர்,
**த ஹேலோ டிரஸ்ட்,**
655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

*ஊதியமும் இப்பதவி சம்பந்தமான நிபந்தனைகளும் தனிப்பட்ட ரீதியில் கலந்தாலோசிக்கப்படும்.*

(21-19-16) (21880)

## ACTION CONTRE LA FAIM — JOB VACANCIES

- Action Centre *La* Faim (Action Against Hunger) is a non - profit making humanitarian International Non Governmental Organization. (INGO) working in the areas of Food Security (Income generating activities, agriculture, etc.) and water & Sanitation (Rehabilitation of water Structures and Hygiene awareness)

**For our programmes based in Jaffna, Action centre *La* Faim is seeking the following Positions.**

### TECHNICAL ENGINEER

- Responsible for assessing water and Sanitation Structures and subsequently, designing technical Solutions, making cost estimates and assess the quality of the work carried out.
- Skills specifications for applicants:
  - University degree in civil engineering
  - Experience in a similar post
  - Strong motivation for humanitarian work
  - Fluent - spoken and written English and Tamil
  - Proficiency in Computers.

Duration of this contract: 4 Months.
Please send application letters and CV's before 30th August 2003 to the following address:

**The Head of Base**
05, Racca Road,
Jaffna.

(சி-29793) (21-19-16)

## அனைத்துலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு நடத்தும் கலாசார நிகழ்வுப் போட்டிகள்

- சகல பிரிவினர்க்கும் உரிய (10வயது, 15வயது, 18வயதிற்குட்பட்ட) எல்லாப் போட்டிகளும் (கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு, நாடகம்) பின்வரும் தலைப்புகளில் ஒன்றை மையக் கருத்தாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.
  - சிறுவர் தம் தேவைகள்
  - ஆரோக்கியமான சிறுவர் வாழ்வு
  - எமது சமூகமும் சிறுவர் பிரச்சினையும்
  - சிறுவர் மேம்பாட்டில் பங்குகொள்ள வாரீர்!
  - அனைத்துலக சிறுவர் தினம்.

1. *கவிதைப்போட்டி*
   - A4 அளவு தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் ஒரு பக்கத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.
   - புதுக்கவிதையாகவோ, மரபுக் கவிதையாகவோ எழுதப்படலாம்
2. *கட்டுரைப்போட்டி*
   - 10 வயதிற்குட்பட்டோர் 150 சொல்லிலும் 15 வயதிற்குட்பட்டோர் 250 சொல்லிலும் 18 வயதிற்குட்பட்டோர் 350 சொல்லிலும் எழுதுதல் வேண்டும்.
3. *சிறுகதைப்போட்டி*
   - A4 அளவு தாளில் மூன்று பக்கங்களில் இருந்து ஐந்து பக்கங்கள் வரை அமையலாம்..
4. *பேச்சுப்போட்டி*
   - மேற்குறிப்பட்ட அனைத்துத் தலைப்புகளிலும் ஆயத்தம் செய்தல் வேண்டும். போட்டி நாளில் குறித்த ஒரு தலைப்பு வழங்கப்பட்டு பேசும்படி வேண்டப்படுவர்.
   - நேர அளவு போட்டி நாளன்று வழங்கப்படும்.
5. *நாடகப்போட்டி*
   - இது பாடசாலை மட்டங்களுக்கிடையிலான போட்டி
   - இப்போட்டிக்கு வயதுப் பிரிவுகள் இல்லை. பங்குபற்றும் நடிகர்கள் 18 வயதிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
   - ஒரு பாடசாலை ஒரு நாடகத்தை மட்டுமே ஆற்றுகை செய்ய முடியும.

**போட்டி நிபந்தனைகள்**

- ஆக்கங்கள் யாவும் போட்டியாளர்களது சொந்த ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.
- அனுப்பப்படும் ஆக்கங்கள் இதற்கு முன்னர் வேறெந்த போட்டிகளுக்கும அனுப்பப்பட்டதாகவோ, பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்தாகவோ இருத்தலாகாது.
- கவிதை, கட்டுரை, சிறுகதை போட்டிகளுக்கு பிரதிகளை அனுப்புவோர் தமது பெயர், வயதுப்பிரிவு, பிறந்த ஆண்டு, பாடசாலை, கல்வி கற்கும் வகுப்பு, பிரிவு, ஆக்கவகை (கட்டுரை/கவிதை/ சிறுகதை) ஆகியவற்றை தனித்தாளொன்றில் குறிப்பிட்டு பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன இணைத்து அனுப்புதல் வேண்டும். பாடசாலை அதிபரின் கையொப்பம் இல்லாதவிடத்து சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்பத்தாட்சிப் பத்திர பிரதி ஏற்கப்படும்.
- பேச்சு, நாடகப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது விபரங் களை 10.09.2003 இற்கு முன்னதாக தொலைபேசி மூலமாகவோ, தபால் மூலமாகவோ எமக்குக் கிடைக்கச்செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
- எழுத்துரு ஆக்கங்கள் கிடைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 12.09.2003
- ஆக்கங்கள் யாவும் நீளக் கடித உறையுள் வைக்கப்பட்டு இடது பக்க மேல் மூலையில் "சிறுவர் தின போட்டி" என எழுதப்பட்டு பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பிவைக்கப் படலாம்.

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு**
**அறை எண் 30,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

- இப்போட்டிகள் பற்றிய சுற்றறிக்கை கல்வித் திணைக்களத்தின் ஊடாக பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.
- போட்டிகள் பற்றிய மேலதிக விவரங்களைப் பெற அழையுங்கள் 021 222 5657
- வெற்றி பெறும் அனைத்து போட்டியாளருக்குமான பரிசுகள் ஒக்ரோபர் 1இல் நடைபெறவுள்ள உலக சிறுவர்தின விழாவில் வழங்கப்படும்.

(சி-29791) (21-19-16)



'புலிகளின் குரல்' நிறுவனம் நல்லூர் ஆலய உற்சவத்தையொட்டி ஆலய வீதியில் நடத்தும் கேணல் கிட்டு, தியாகி லெப். கேணல் திலீபன் நினைவுச் சிறப்புக் கலையரங்கில் நேற்று இடம்பெற்ற மாவீரன் பண்டாரவன்னியன் நாட்டுக் கூத்தில் ஒரு காட்சி. (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# இஸ்ரேலிலிருந்து 15 பீரங்கிகள் கொள்வனவு செய்வது ரத்து!

## கேள்விப்பத்திர உபகுழு கூடித் தீர்மானம்

கொழும்பு,ஓக.27

இஸ்ரேலிலிருந்து பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதை முற்றாக ரத்துச் செய்வதென அமைச்சரவை அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர உபகுழு தீர்மானித்திருக்கிறது.

11 கோடி ரூபாவுக்கு கூடுதலான செலவில் கடற்படைக்கு இஸ்ரேலிடமிருந்து பதினைந்து மி.மீற்றர் பீரங்கிகள் கொள்வனவு செய்யப்படவிருந்தன.

இக்கொள்வனவை எதிர்த்த காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன அந்த உபகுழு முன் ஆஜராகி இரண்டு மணிநேரமாக விளக்கியதையடுத்தே கொள்வனவு ரத்துச்செய்யப்பட்டது.

நிதியமைச்சர் கே.என். சொக்ஸி இக்குழுவுக்கு தலைமைதாங்கினார்.

இஸ்ரேலிலிருந்து பீரங்கிகளை கொள்வனவுசெய்வதை ரத்துச் செய்துவிட்டு அவற்றைக் கொள்வனவுசெய்ய மீண்டும் கேள்விப்பத்திரம் கோருவதென உபகுழு தீர்மானித்திருக்கின்றது. இதற்கென புதிய கேள்விப்பத்திரச் சபையொன்றை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட 'புஸ் மாஸ்டர்' ரக பதினைந்து 30 மி.மீற்றர் பீரங்கிகளை மூன்றரைக் கோடி ரூபாவிற்கு கொள்வனவு செய்ய முடியுமெனவும் அமைச்சர் சேனாரத்தின உபகுழுவிடம் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஓக.27

டொனால்ட் கணேஷகுமார் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணி எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-6-5)

## சோடா என எண்ணி மண்ணெண்ணெய்யை குடித்த குழந்தை!

தென்மராட்சி,ஓக.27

விளக்குக்கு ஊற்றிய பின்னர் போத்தலுடன் நிலத்தில் வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய்யை ஒன்றரை வயது குழந்தை சோடாவென நினைத்து குடித்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த அருள்ராஜன் சாயினா என்னும் பெண் குழந்தையே மண்ணெண்ணெய் குடித்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)


இன்றைய ஒறிஜினல் CD வெளியீடு

VCD SONG
☆ பிரியமான தோழி
☆ காதல் கொண்டேன்
☆ ஜெயம

Audio CD
★ உள்ளம் கேட்குமே
★ தென்னவன்
★ ஜெயம

ரூபா 95/= மட்டுமே.

வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.
மூர்த்தி வீடியோ & எலெக்ரோனிக்
மானிப்பாய்.
(சி-29804)

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித்குமார் (இருவேடம்), சிம்ரன், விவேக் நடித்த
வாலி
காட்சி நேரம்: 11.00, 3.00
JUDGE & JURY
தினசரி 7.00
சில தினங்கள் மட்டும்.
(31-12-18) (C29232)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந். த்ரிஷா நடித்த
மனசெல்லாம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
JUDGE & JURY
இரவு 8.45 இற்கு.
(C29213) (31-12-18)


லஷ்சுமி சினிமா இணுவில்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன் (ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).
(21821)

ராஜா யாழ்ப்பாணம்
28ஆம் திகதி வரை
விஜயகாந்த், கிரண், விவேக் நடித்த
தென்னவன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
29முதல்
(C29243)

லிபேட்டி அச்சுவேலி
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீல்ஸ்)
தினசரி காட்சி: 3.00. 7.00
காலை 11.00 மணிக்கு
Red Scorpion
(C29313)



இதமானகுளிர் தெரிவுகள்....
உங்கள் வாழ்க்கை முறைக்கு உகந்தவை!



WEST POINT

TROPICAL
Air Conditioners

Split 9000-60000 Btu/hr
Window 9000-24000 Btu/hr

- எழிலானது
- பிரதேசமயமார்க்கம்
- சிக்கனமானது
- குறைந்த மின்வலு
- குறைந்த சப்தம்
- கூடிய காற்று சுற்றோட்டம்
- Epoxy எனும் துருப்பிடிக்காமல் பாதுகாக்கும் விசேட தீந்தை பூசப்பட்டது.
- போதுமானளவு உதிரிப்பாகங்கள் மிகச்சிறந்த விற்பனைக்குப்பின் சேவை
- இலங்கை முழுவதும் கிடைக்கிறது

5 வருடம் கொம்பரசருக்கு உத்தரவாதம்

உலகம் பூராவும் 77 நாடுகளில் விற்பனையாகின்றது.

இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கை முழுவதும் விற்பனையாகின்றது

பிரதான முகவர்: (ஏக விநியோகஸ்தர்)
WEST POINT HOUSE
காட்சியறை-121. யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொ.பே.:074-724413,389446 தொ.ந.074-720543
Email:jss@dialogsl.net

யாழ்.முகவர்கள்
SAAI ELECTRONICS
646, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே.:021-2225025, 0777721610
தொலைநகல்.:021-222 5025

MAHES & SONS
இல. 03. புதிய சந்தை. சாவகச்சேரி.
தொ.பே.:0777-725258, 021-222 2552

* Plus VAT

WEST POINT, We're Air - conditioning The Earth.


## பாராட்டி வாழ்த்துகிறோம்



பூனாறி லேன், கொக்குவில் கலைவாணி சனசமூக நிலையத் தலைவரும் சமூக சேவையாளருமாகிய **திரு. சதாசிவம் வேலாயுதம் (தங்கவேல்)** அவர்கள்

அண்மையில் யாழ். மேலதிக நீதிவான் **பா.பாலசுப்பிரமணியம்** முன்னிலையில் யாழ்ப்பாணம் நீதி நிர்வாகத்திற்கான சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார் என்பதையிட்டு இவரின் சேவை சிறந்தோங்கி மேன்மேலும் சிறப்புறப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

*தம்பாலை, அச்சுவேலி.* (21894)(31-12-18) - நடேசலிங்கம் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா பாக்கியலட்சுமி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பாக்கியலட்சுமி கடந்த 25.08.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் சத்தியசீலன் (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), லிங்கராசா (கனடா), சண்முகலிங்கம் (கனடா), உதயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலட்சுமி, லோகேஸ்வரி, வசந்தகுமாரி, J.N.P. பாக்கியராஜா (கிராம சேவையாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷாந்தி, பிரதீபன், நிலாணி, உமேஸ்வரன், லக்ஷாயினி, கிருஷாயினி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற புவனலட்சுமியின் அன்புச் சகோதரியும் கமலாதேவி, மகாதேவா (மத்தியவங்கி, கொழும்பு), சண்முகநாதன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சண்முகலிங்கம் (மகன்),
J.N.P. பாக்கியராஜா
(மருமகன், J/81 கிராமசேவை அலுவலர். கோட்டை).

*புதிய செம்மணி வீதி, சிங்கராஜர் ஒழுங்கை, கல்வியங்காடு.*
(21893)(31-12-17)

### திருமதி நீலலோசனி பாலேந்திரன்

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலலோசனி பாலேந்திரன் (ஆசிரியை பரி.தோமஸ் கல்லூரி **(prep)** 25.08.2003 அன்று கொழும்பில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி மு.வேலுப்பிள்ளை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் கனிஷ்ட புத்திரியும் கா.பாலேந்திரன் (இளைப்பாறிய ஆசிரியரும், பிரதமகாசாளர், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொழும்பு - 13) அவர்களின் அன்பு மனைவியும் செல்வன் பா.தினேஷ் (செலான் வங்கி, தெஹிவளை), செல்வன் பா.பிரதீஸ் (பழைய மாணவன், பரிதோமஸ் கல்லூரி, கல்கிசை), செல்வி பா. தாட்சாயினி (கொ - மெதடிஸ்ட் கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும் சுகுண பாலயோகன் (கனடா), திருமதி லில்லி சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி ரதிமதி கனகசபாபதி, பாலச்சந்திரன், திருமதி ஜெயராணி சிவசுப்பிரமணியம், திருமதி குலராணி சுந்தரலிங்கம், திருமதி கலாரஞ்சினி மகேந்திரன் (ஹற்றன் நஷனல் வங்கி, பிரதான கிளை), இராசரெத்தினம் (இளைப்பாறிய அதிபர்), பரமானந்தர் (இளைப் பாறிய **Chief Pharmacist**), இரத்தினசிங்கம் (கணக்காளர், கனடா) ஆகியோரின் மைத்துனியும், திருமதி பத்மலோசனி இராசரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), திருமதி தவமணி பரமானந்தர் (இளைப்பாறிய அதிபர்), திருமதி மனோன்மணி இரத்தினசிங்கம் (கனடா), இராசேந்திரன் (மேலதிக பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை), மகேந்திரன் (இளைப்பாறிய தபாலதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இருந்து இன்று (27.08.2003) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.3, 59ஆவது ஒழுங்கை,*
***Off Fussels Lane,***
*வெள்ளவத்தை.*
*தொ.பே.-2553282.*

தகவல்:
க. பாலேந்திரன்.

(21888) (32-12-18-31)

### அப்பாப்பிள்ளை தியாகராசா

பண்ணாகத்தைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை தியாகராசா 26.08.2003 செவ்வாய் அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வமலர், பாலச்சந்திரமூர்த்தி (ஸ்ரீ முருகன் அச்சகம், சித்தன்கேணி), சற்குணதேவி (குடும்ப நல சேவையாளர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை), அருணகிரிநாதன் (நோர்வே), சிவயோகநாதன் (தெ.ப.அ.கூ. சங்கம், சங்கானை), பரந்தாமன் (கிருஸ்ணா ஸ்ரோர்ஸ், பண்ணாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராசா (பொது முகாமையாளர், ப.நோ.கூ.ச., பரந்தன்), **Dr.S.T.**சிங்க அரியரத்தினம் (தலைவர், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், காரைநகர்), யோகேஸ்வரி (நோர்வே), தமிழரசி ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மிளா, சுனிதா, கார்த்திகா, கோபிராஜ், சாந்தினி, தனீபன், பார்த்திபன், பிரதீபன், ஜெனனி, புருஷோத், கிருஷாந், மதுஷிகா (நோர்வே), தசாந்த் (நோர்வே) ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.08.2003) செவ்வாய்க்கிழமை பி.ப.4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம், சுழிபுரம்.* (21895) (31-12-18)

தகவல்:
தி.மகேஸ்வரி
(மனைவி).

### சேவியர் யூலன் அன்ரன் (யூலியஸ்)

யாழ்ப்பாணத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேவியர் யூலன் அன்ரன் அவர்கள் 25.08.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் தொடர்பான விடயங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*319, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.* (21896) (31-12-18)

தகவல்:
மகன் (யூ. டனிஸ்).

## மூதூரில் மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது படகை மூதூர் இறங்கு துறையில் விட்டுவிட்டு தங்களைக் கூட்டிச்சென்ற கடற்படையினர் வெயிலில் முட்டுக்காலில் நிற்கவைத்துத் தொல்லைப்படுத்தினர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஞாயிறு மாலை 6.30 மணியளவில் தங்களை விடுவித்த படையினர் சம்பூர்பகுதிக்குச் செல்லக்கூடாது என்றும் இறால்குழிப் பக்கம் செல்லும்படியும் உத்தரவிட்டனர் என்றும் அவர்கள் கூறினர்.

"இறால்குழிக்குத் திரும்பி அன்றிரவைக் கழித்த பின் அடுத்தநாள் திங்கள் காலை சம்பூர் திரும்ப விரும்பினோம். ஆனால், திருகோணமலையிலும், எமது வீடுகள் அமைந்துள்ள சம்பூர் உட்பட புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் மூதூர் கிழக்குப் பிரதேசத்திலும் அன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் கடலில் மீனவர் படகுகளைக் காணமுடியவில்லை. அதனால் நாமும் கடலில் பயணிக்கப் பயப்பட்டோம். பின்னர் நேற்று (செவ்வாய்) காலை நிலைமை சீரடைந்ததும படகில் சம்பூர் திரும்பினோம்" - இப்படி அந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்த மீனவர்களைப் படையினர் கைதுசெய்து தடுத்து வைத்திருந்த சமயம் அவர்களது படகு மூதூர் இறங்குதுறையில் ஆள்களின்றி அநாதரவாகக் கிடந்தது. அதனையடுத்து இவர்கள் அனைவரும் காணாமல் போயிருக்கலாம் என்று அஞ்சப்பட்டது. அச்சம் காரணமாக கண்காணிப்புக் குழுவினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

## படகில் இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளில் இவர் யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியைச் சேர்ந்த தினேஷ்குமார் அன்ரன் (வயது-24) எனத் தெரியவந் துள்ளது.

விசாரணைகளின் போது அவர் மேலும் கூறியதாவது:-

பிரான்ஸின் ப்யூ என்ற இடத்திலுள்ள ஹென்றிடுனா 4ஆவது அவென்யூவில் வசித்து வரும் எனது பெற்றோரை பார்ப்பதற்காக 1997 இல் இலங்கையில் இருந்து பிரான்ஸ் சென்றேன். அங்கு பெண்டன் பாரன் என்ற நிறுவனத்தில் பணியாற்றினேன். கடந்த 20ஆம் திகதி பிரான்ஸில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தேன். சென்னை ஷெனாய் நகரில் ஞானம்மா அலெக்சாண்டர் குடியிருப்பில் வசிக்கும் உறவினர்களைப் பார்த்தேன். பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்களைப் பார்ப்பதற்காக படகு மூலம் இலங்கை செல்வதற்காக இங்கு வந்தேன் - எனக் கூறியுள்ளார்.

பிரான்ஸில் இருந்து சென்னை வந்ததற்கான கடவுச்சீட்டு, விசா போன்ற ஆவணங்களை வைத்திருக்கும் இவரின் இரு பைகளை சோதனையிட்டதில் இந்தியப் பணம் ஒன்பதாயிரம் ரூபாவும், 6 ஆயிரத்து 845 யூரோடொலர்களும், மொபைல்போன் மற்றும் பயன்படுத்திய உடைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

பணம் கொடுத்து கள்ளத்தனமாக இலங்கை செல்ல முயன்றது விசாரணையில் தெரியவந்ததால், கடற்படையினர் இவரை இராமேஸ்வரம் கோயில பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸாரின் விசாரணையில் முன்னுக்குப் பின் முரணான தகவல்களைக் கூறியதால் இவரிடமிருந்த யூரோ டொலர், இந்தியப் பணம் மற்றும் மொபைல் போனை பறிமுதல் செய்து அவற்றை பொலிஸார் நீதிமன்றில் ஒப்படைத்தனர். (ஒ)

## யுத்தநிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களுக்கான மின்சாரம் - 'மக்களுக்கான பாதைகள் என இரு பாரிய திட்டங்களை அரசு மேற்கொண்டுள்ளது எனவும் குறிப்பிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது:-

கிராமிய மின் விநியோகத்திட்டத்தின் மூலம் 16 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சார வசதி கிடைக்க வழியமைக்கப்பட்டுள்ளது. கிராமப்புற வீதி, அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட அனைத்து தேர்தல் தொகுதிகளுக்கும் தலா 20 லட்சம் ரூபா ஒதுக்கப்படும். இவற்றிற்கு மேலதிகமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 500 கிலோ மீற்றர் கிராமப்புற, விவசாய கிராமங்களுக்கான பாதைகளும் சீரமைக்கப்படும். இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கி, உலக வங்கி என்பன நிதி உதவி வழங்கி உள்ளன.

இந்நிலையில் முன்னைய அரசினால் கைவிடப்பட்ட 'வீதிவாரத்திட்டம்' மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக 5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 'சிரான்' மூலம் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் திருப்தியளிக்கவில்லை என்பதால் விடுதலைப் புலிகள் மற்றும் மக்களின் பிரதிநிதிகளுடனும் பேசி உறுதியாக திட்டம் ஏற்படுத்தப்படும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## கிழக்கில் பொலீஸுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து முஸ்லிம்களைப் பாதுகாக்க முஸ்லிம்களை உள்வாங்கும் வகையில் பொலீஸாருக்கு ஆள்களைச் சேர்க்க பிரதமர் உத்தரவிட்டார்.

இந்த முடிவை தமிழ்க் கட்சிகள் பலமாக எதிர்த்தன. ஆயினும், பொலீஸுக்கு ஆள்திரட்டும் திட்டத்தில் மாற்றமில்லை என்று ஹக்கீமிடம் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

மேலும் இப்பேச்சின் போது, இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வின் ஓர் அம்சமாகவும் அதேவேளையில் நீண்டகால செயற்றிட்டமாகவும், நாடு முழுவதிலும் சமூக ரீதியிலான பொலீஸ் அமைப்பை ஏற்படுத்துவது குறித்தும் இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

பிரிட்டனையும் இவ்வாறான பொலீஸ் நடைமுறை உள்ள கனடா போன்ற ஏனைய நாடுகளையும் முன்னுதாரணமாகக் கொண்டு அத்துறை சார்ந்த நிபுணர்களுடன் அரசாங்கமும், முஸ்லிம் காங்கிரஸும் தனியாகவும், கூட்டாகவும் கலந்துரையாடல்களை நடத்துவது பற்றியும் பேச்சில் ஆராயப்பட்டது.

இது பற்றி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும், சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பமாகும் போது விடுதலைப் புலிகளுடனும் கலந்து பேசி இணக்கப்பாடு காண்பது பற்றியும் ஆராயப்பட்டது.

## நல்லை ஆலயத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலான திருட்டுக்கள் வசந்த மண்டபம், வைரவர் கோயில் பகுதி, அர்ச்சனைத்துண்டு பெறும்பகுதி ஆகிய இடங்களிலேயே இடம்பெற்றுள்ளன.

ஆலய உள்வீதியில் பெண் ஒருவரின் சங்கிலியை அறுக்க முனைந்த மற்றொரு பெண்ணை பெண்தொண்டர் ஒருவர் பிடித்ததாகவும் -

அப்போது பெண்தொண்டரின் கையைக் கடித்துவிட்டு அந்தப் பெண் தப்பிவிட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணையில் ஈடுபட்ட பொலீஸார் அநுராதபுரம், திருகோணமலைப் பகுதிகளில் இருந்து வந்ததாகக் கூறப்படும் 12 பேரைக் கைதுசெய்துள்ளனர். இவர்களில் ஐவர் ஆண்கள், ஏனையோர் பெண்களாவர்.

இவர்கள் யாழ். நீதிவான் ஆர். ரி.விக்னராஜா முன் நேற்று மாலை ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து, திருடப்பட்டதாகக் கருதப்படும் தாலிக்கொடி ஒன்று மீட்கப்பட்டதாகப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணை செய்ய அனுமதிக்குமாறு பொலீஸார் கோரியதை அடுத்து அவர்களை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-3-5-6-86-ரி)

## புனரமைப்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

முதல் கட்டமாக ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவை இந்து கலாசார அமைச்சுக்கு திறைசேரி வழங்கியிருந்தது.

மீதியான நிதியை வழங்குவதற்கு வசதியாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஒன்றரைக் கோடி ரூபா நிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விவரம், அந்த வேலைகளின் முன்னேற்றம் ஆகியன தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு திறைசேரிச் செயலாளர், அரச அதிபரிடம் கோரியுள்ளார் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.


### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

சகல அங்கத்தவர்களுக்கும்,

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்த ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என முன்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பின்வரும் இரண்டு பணிகளும் பூர்த்தியாகாத காரணத்தினால் பொதுக்கூட்டத்தை மூன்று வாரங்களுக்கு ஒத்திப்போடுவது என 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை கூடிய சங்கச்செயற்குழு தீர்மானித்திருக்கிறது என்பதை அறியத் தருகின்றேன்.

(1) எமது சங்க மேற்பார்வையில் கட்டப்பட்டுவரும் கலலூரி விடுதிக்கட்டடம் தொடர்பாக யாழ். அரச அதிபரினால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர்கள் குழுவின் கட்டட கட்டுமான மதிப்பீட்டறிக்கை.

(2) சங்கக் கணக்கு விவரங்களை கணக்காய்வு செய்துவரும் நிறுவனத்தின் கணக்காய்வு அறிக்கை.

இந்த இரண்டு பணிகளுக்கும் கால அவகாசம் வழங்கும் விதத்தில் 21.09.2003 அன்று காலை 9.30மணிக்கு வருடாந்தப் பொதுக்கூட்டத்தை கல்லூரியில் நடத்துவது எனத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்ட நிகழ்ச்சி நிரல் அடங்கிய நோட்டீஸ் 15.09.2003இற்கு முன்னர் உறுப்பினர்கள் அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாக அவர்களது பதிவு விலாசங்களுக்கு சாதாரண தபாலில் அனுப்பிவைக்கப்படும். அத்திகதிக்கு முன்னர் அறிவித்தல் கிடைக்காத உறுப்பினர்கள் செயலாளரோடு அல்லது பொருளாளரோடு தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

முன்னைய அறிவித்தலுக்கு மாறாக பொதுக்கூட்டத்தை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைக்கவேண்டிய நிலையேற்பட்டதால் உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்துகிறோம்.

நன்றி

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C/29806) (29-18-12)

SSO, SDO
போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்
விற்பனையாகின்றது.
சொற்ப பிரதிகளே உள்ளன.
By.P.கமல்தாசன்
பூபாலசிங்கம் புத்தகசாலை.
(12) (21874)

LOGIC
PAPER & DAY CLASS
A/L 2004
சனி, ஞாயிறு: 4.00 - 6.00 p.m.
செவ்., வியா. 7.00 - 8.00 a.m.
✱ அலகுரீதியான மீட்டல்
By-கமல்
BRIGHTMAN
நாவலர் வீதி.
(21874)(12)

புதிய வீடியோCD வெளியீடு
பிரபுதேவா நடித்த
அலாவுதீன்
புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு
விஸ்ணு வீடியோ
கோண்டாவில்.
சோலை வீடியோ
நெல்லியடி. T.P.0777 261416
(12) (21157)


### மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை

24/2, சென் அன்ரனீஸ் லேன், பாஷையூரைச் சேர்ந்த சூசைப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை நேற்று (26-08-2003) செவ்வாய்க்கிழமை இரவு 10.25 மணிக்கு கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (28.08.2003) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம்.

தகவல்:
செ.பிறீமன் (நிசல்டா),
போதகர் - காந்தி.

(21897)


### இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சைக்கான கருத்தரங்கு

அடுத்தமாதம் நடைபெறவுள்ள இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றவுள்ள மாணவர்களுக்கான சட்ட மாணவர் இந்து மகாசபை, 'உதயன' பத்திரிகை நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள கருத்தரங்கு, எதிர்வரும் 29, 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் ( வெள்ளி, சனி, ஞாயிறு) 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் தினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரையும் நடைபெறும். இக்கருத்தரங்கில் பங்குபற்றவென பதிவுசெய்தவர்கள் 29.8.2003 அன்று காலை 8.45 மணிக்கு 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தில் சமுகமளிக்கும்படியும் இது வரை பதிவு செய்யாதோர் 071-2386070 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்யலாம் எனவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(C/29792) (29-18-12)

LLION AIR
லயன் ஏயர்
தினமும் காலையும் மாலையும் பாதுகாப்பான கொழும்பு விமான பயணத்திற்கு,
GENERAL SALES AGENT
&
HANDLING AGENT,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA.
Tel : 021 - 222 2504, 021 - 222 2823
Fax : 021 - 222 2040
அவசர தொடர்புக்கு
HOTLINE : 0777 - 382343
0722 - 401423.
(C29348) (12-18-29)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.